Edited by the Swami Vallinayakam

விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] ஏப்பிரல்மீ [புத்தகம் 8

OURSELVES.

நமது பத்திரிகை.

நமது திருநெல்வேலி ஜில்லாவில், சிறிது காலமாக 'விவேகபாநு' என்னும் இப்பத்திரிகை தோன்றி, ஆங்காங்குள்ள அஞ்ஞான விருளையோட்டி, மெய்ஞ்ஞானவொளியைவிசி, மயக்கமெனும் நித்திரையில் கிடப்பவரையெல்லாம் தனது விஷயமெனும் கிரணங்களால் தட்டியெழுப்பி, அன்னோரை ஆத்மவுலகப்பிரவாகத்திற்குத் தூண்டிவருவதை யாவரும் அறிந்திருக்கலாம். இத்தகையமேலானபரோபகாரத்தைச் செய்யக் கருதிய புண்ணியவான்களின் வேண்டுகோளின்படி சென்ற மார்ச்சு மாதம்வரை இவ்வரிய பத்திரிகையை நடத்திவந்தஸ்ரீகணபதி யானந்தசுவாமிகள் என்பார் தற்பொழுது பலவிடங்களிலுள்ளசிஷியர்களின் பிரார்த்தனைக்கிணங்க அவரவர் வசிக்கும் ஸ்தலங்களுக்கு விஜயம் செய்யுங் கருத்துக் கொண்டாராதலின், இப்பத்திரிகையின்போஷகராயுள்ளார் அறிவில் சிறியேனாகிய வென்னை அப்பெரியோர் இறக்கிய பாரத்தை வகிக்கச் சொல்ல, அதற்குச் சிறிதும் பாத்திரமல்லேனாயினும், இங்ஙனம் நேர்ந்தது சர்வாந்தரியாமியாய் விளங்கும் பகவானது கட்டளையேயென மதித்ததினாலும், அங்ஙனமாயின் அதனை நிறைவேற்றுதலே கடமையென உணர்ந்ததினாலும், இவ்வரிய விஷயத்தைக் கொண்டுநடத்துவதிற் பெரியோரது அனுக்கிரகமும், இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்பவரும் பரோபகாரசீலரது உற்சாகமுமே என்னை நடத்துமெனும் தைரியத்தினாலும் ஒருவாறு துணிந்து அவரது வேண்டுகோளுக்கிணங்கலாயினேன். எவ்வளவுதூரம் இவ்வேலைக்குயான் தகுதியானவன் என்பது எனக்குத்தெரியவில்லை. நாளடைவில் யாவருக்கும் வெளியாகத் தக்கதே.

சென்ற மார்ச்சுமாதப் பத்திரிகையின் உட்பக்கங்களெல்லாம் அச்சடித்துத் தீர்ந்தபின்னரே இதில் பிரவேசித்தேனாதலின், இவ்விஷயம் அப்பத்திரிகையி லெழுத மார்க்கமில்லாமற் போய்விட்டது.

நமது பத்திரிகையானது கல்கத்தா, இங்கிலாந்து, மோரிஷியஸ், அமெரிக்கா முதலான இடங்களுக்கும் அனுப்பப்படுதலால் அவ்வத்தேசங்களில் நமது பாஷை யறியாரும் பத்திரிகையி லடங்கி யிருக்கும் விஷயங்களின் தலைப்பெயர்களை யேனும் அறியும் பொருட்டு இனிமேலாக அவற்றிற்கு ஆங்கிலமொழி பெயர்ப்புகளுடன் அச்சிடுவதாக நிச்சயித்து நடத்தி வருதல் நமதுபத்திரிகாபிமானிகள் யாவர்க்கும் சந்தோஷத்தையே யுண்டுபண்ணத் தக்கதெனநம்புகின்றேன்.

பத்திராதிபர்.

MORALITY AND KNOWLEDGE.

நல்லொழுக்கமும் மெய்யறிவும்

உலகத்தில் அநேகர் மெய்யறிவொன்றிற்கே புலப்படத்தக்க பல அருமையான விஷயங்களைப் பேசவும், அயலார்க் கெடுத்துபதேசிக்கவும் கேட்கிறோம். ஆயினும் அவரிற்பலர் தாமேபிறருக் குபதேசித்த மொழிகளுக்கு மாறாக ஒழுகலையுங் காண்கிறோம். இங்ஙனமிருத்தலின், பெரும்பாலார் நல்லொழுக் கத்திற்கும், மெய்யறிவிற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும், ஒழுக்கம்மாறாகவிருப்பினும் மெய்யறிவுடைத்தாயிருத்தல் கூடுமென்றும் நினைக்கின்றனர். இதனுண்மையைப்பற்றிச் சிறிது விசாரிப்பாம்.

நல்லொழுக்கமாவது யாது? நல்லொழுக்கம் இன்னதென்பது பிறர்யோசிக்காமலேயவருடைய மனோசாக்ஷிக்குப் புலப்படுவதாயினும், எழுதப்புகின், எவ்வளவுதாரம்வரையினும் முடிவுபெறாமல் விரியத்தக்கதாயினும், இவ்விடத்தில் ஒருவாறுசுருக்கிக்கூறுவாம். ஒழுக்கமெனின், நடையெனப் பொருள்படும். ஆகவே நல்லொழுக்கமெனின் நன்னடை; அதாவது தனக்கும் பிறருக்கும் நன்மைபயக்கத்தக்க வழியில் நடத்தலென ஏற்படுகின்றது. அவ்வழியின் அங்கங்கள் பலவுளவேனும், எவ்விதத்தானும் மனோவாக்குக் காயங்களால் மற்றஜீவர்களுக்கு யாதொரு உபத்திரவமும் உண்டுபண்ணாதிருத்தல், சத்துருக்களாலும் தனக்கு நேரிடுந்துன்பத்தைப் பொறுத்தல், எல்லாவுயிர்கள் மேலும் தன்னிடத்திற்போல இடையறாநேசம் வைத்தல், புத்திரமித்திரகளத்திராதிகளிடத்தும், பகைவரிடத்தும் சமபாவனைவைத்தல் * பிரமசரியவிரதமனுஷ்டித்தலாதியனவே முக்கியமானவை யெனக்கூறலாம்.

மெய்யறிவென்பதியாது? மெய்யறிவெனின், உண்மைஞானமெனப் பொருள்படும். அதன் அங்கங்களும் பலவுளவேனும், தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய

"எப்பொருளெத்தன்மைத் தாயினுமப் பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்பதே

முக்கியமானதெனக்கூறலாம். அதாவது எந்தப்பொருளிடத்தும் உண்மைப்பொருளை அறிவதே அறிவென்பதாம்.

இவ்வுலகின்கண் நாம் காணும்பொருள்களியாவும் இருபகுப்பினுள் அடங்கியவையாயிருக்கின்றன. அவ்விருபகுப் பாவன:—சாரம், அசாரம் என்பனவேயாம். இவ்விருவகைப்பொருள்களிலும் மனிதர்கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வாம். நமக்குவிஷயமாகும் ஒவ்வொரு பொருளிலும் நம்முடைய கற்பனையும் கலந்தேயிருக்கின்றது. இவ்வுண்மையை உணராமல்பொருள்கள் தோன்றும் வண்ணமே சாதாரண மாந்தர்நிச்சயித்தலின்மயக்கத்திற்கிடமாகின்றது. அங்ஙனம் நிச்சயித்தலையே அஞ்ஞானமெனச்சுருதிகள் கூறுகின்றன. அஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் எனப்படுமிரண்டும் அறிவேயாயினும் முந்தினதால் துன்பமும் பிந்தினதால் இன்பமும் ஜனிக்கின்றன. கானல்நீரை ஜலமாகவே கொள்ளும்மிருகங்கள் அதனையருந்தலாமெனக்கருதி, ஓடியுழன்று, துக்கத்திற்குள்ளாகின்றன. ஆனால்

* விவாகமின்றி யிருத்தல் அல்லது தன்மனைவியைத் தவிர அயல்மாதரை யெல்லாம் மனோவாக்குக் காயங்களால் விலக்கியிருத்தல்.

அதனை யுள்ளவாறு கிரகித்தமனிதனுக்கு அவ்வித்துக்கம் சம்பவிக்கிறதில்லை. இதுநிற்க, மெய்ஞ்ஞான மென்பது இன்னவென்பதை திருஷ்டாந்த வாயிலாக நன்குணர்த்துவாம். ஒருமனிதன் பனிக்கட்டியைப் பார்த்து வெண்ணிறக்கல்லென்று சொல்லுகிறானென்றும் மற்றொருவன் ஜலமெனச் சொல்லுகிறானென்றும் வைத்துக்கொள்வோம். இதில் ,பின்கூறியவனுடையது உண்மையறிவன்றோ? அல்லது, வேறொருவன் அதனை அணுக்கூட்டமெனச் சொல்வானாயின், அவனுடையது முற்கூறியவனுடையதினும் உண்மையன்றோ? இதனைநோக்கின், முன்கூறியவனுடையது அஞ்ஞானமெனக் கூறப்படுகின்றது. காரியத்தின் தோற்றம் எவ்விதமாயிருப்பினும் அது காரணத்தைத் தவிர இன்றாதலின் காரியப்பொருளின் அறிவைநோக்கி, காரணப்பொருளின் அறிவுமேலானதெனவும், உண்மையானதெனவும் கொள்ளப்படுகின்றது. நமக்குப் புலப்படும் பொருள்கள் யாவும் காரியப்பொருள்களாதலாலும், அவற்றிற்கு அதீதமாயுள்ள காரணப் பொருள்களாயிருப்பனவும் எதார்த்தில் காரியப்பொருள்களாகவே யிருத்தலாலும், இவ்வாறே செல்லச்செல்ல யாவும் காரியப்பொருள்களேயாகின்றமையாலும், சராசரங்களாகத் தோன்றும் யாவற்றிற்கும் மூலகாரணமான பொருளை யுணரும்உணர்வே மெய்ஞ்ஞானமெனக் கொள்ளற்பால தென்றார் நாயனார். மெய்யறிவென்பதற்கு இஃதேதகுதியான பொருளென்பது

"ஐம்பறி வறிந்தவை யடங்கினர்க ளேனும்
மெய்யறிவி லாதவர்கள் வீடுபெறுமோ"

எனச் சிவஞான போதத்திற் கூறியிருத்தலாலும் நன்குவிளங்குகின்றமைகாண்க.

இனி, இத்தகைய மெய்யறிவு நல்லொழுக்கமின்றி யுண்டாகுமாவென ஆலோசிப்பாம். வானசாஸ்திரி யொருவன் விண்மீன்களின் நிலையைநிதானிக்கப் புகுவானாயின், அவனுடைய கருவி ஸ்திரமாகவும் அதிலுள்ள கண்ணாடிகள் சுத்தமாகவும் இருக்கவேண்டுவ தாவசியகமன்றோ? அதுபோலவே, இந்திரியங்களால் *அறியப்படாததாயும், சூக்ஷுமங்களுக் கெல்லாம் சூக்ஷுமமானதாயும், சர்வவியாபகமாயும், யாவற்றிற்கும் காரணமாயும இருக்கப்பட்ட உண்மைப் பொருளை யறியவேண்டுமாயின் மனமானது சஞ்சலமற்றதாயும், பரிசுத்தமானதாகவும் இருக்கவேண்டுவ தாவசியகமாகின்றது. சாதாரணமனிதர்களுடைய மனமானது மலம்பொருந்தினதாயும், சதா சஞ்சலிப்பதாகவுமேயிருக்கின்றது. மனதின்சலனம் யாவர்க்கும் பிரத்தியக்ஷமே. அதற்காகப்பலர் துக்கித்துக்கூடஇருப்பார்கள்.

மனதில் அழுக்குள்ளதென எவ்வாறறியலாமெனின், ஒழுக்கத்தாலறியலாகும். மலமென்பது தீக்குணங்களேயாம். அவைகளிற் பழவின்ஒழுக்கமும்அவற்றையனுசரித்தே ஏற்படுகின்றது. தீயவொழுக்கம் இன்னதென்பது யாவர்க்கும் அறியற்பாலதாகலானும், முன்னர் நல்லொழுக்கம் இன்னதெனக் கூறியிருத்தலால் அதற்குமாறுபட்டதுமற்றதெனவெளிதில் உணரக்கூடிய தாதலானும் ஈண்டுப்பிரத்தியேகமாய் அதனைவிரிக்கப்புகுந்தாமில்லை.

இனி, மனதின் சஞ்சலமும் அசுத்தமும் நல்லொழுக்கத்தால் நீங்குமேயன்றி அஃதில்லாவிடின் நீங்காவெனக்கூறுதும். மனதின் சாஞ்சல்யம் இராகத்துவேஷங்களாலும், அவைகள் சுயசுயம் பாராட்டும் தன்மையாலும் உண்டாகின்றன. மனதின் அசுத்தத்திற் கேதுவாகிய சகல துர்க்குணங்களும் இராகத்துவேஷங்களினின்றே யுண்டாகின்றன. *சுயமே சுயசுயம் பாராட்டுதல் எம்மட்டும் அடித்திருக்கின்றதோ

அம்மட்டும் மனதின் சலனமும் அசுத்தமும் நீங்காவென்பதும், அவை நீங்காமையால் மெய்ஞ்ஞானோதயத்திற் கேதுவில்லை யென்பதும் வெளியாகின்றன. நியாயாதிபதியொருவன் ஓர் கேஸினுண்மையைக் கண்டுபிடிக்க விரும்புவானாயின் எங்ஙனம் அவன் முன்பாகவரும் கக்ஷிக்காரர்கள் மேல் விருப்பு, வெறுப்பின்றியிருந்து, சாக்ஷிகளை விசாரிக்கவேண்டுவ தாவசியகமோ அங்ஙனமே எந்தப்பொருளின் உண்மையையும் அறியவேண்டுமாயின் அதனிடத்தில் இராகத் துவேஷமின்றி ஆராய்ந்துணர்தல் ஆவசியகம். சுய நயமுளதேல் இராகத் துவேஷம் ஏற்படும். ஏற்படின், மெய்யுணர்வுண்டாகாது. ஆனால் சுயநயத்தை விட்டு யாவரையும் தன்னைப்போலவே நேசிக்கின், மனம் சாந்தமடைதலோடு பரிசுத்தமுமடையும். எங்ஙனமெனின், பிதா ஒருவன் தனது அருமைப் புத்திரன் அனுபவிக்கும் விஷயங்களனைத்தையும் தான் அனுபவிக்காமலே, அனுபவித்தது போன்ற சந்தோஷத்தை யடைதல் அப்புத்திரன் விஷயத்தில் தன்னுடைய சுயநயத்தைத் துறந்திருத்தலினாலன்றோ? அதுபோலவே சகல ஜீவர்களையும் ஒருவன் நேசிப்பானாயின் அவனுக்கு இராகத்துவேஷாதிகள் உண்டாதற்கிடமில்லை. எங்ஙனம் சுயநயம் பாராட்டுதல் துர்க்குணங்களுக் கிருப்பிடமாயும் அவற்றின் மூலமாகக்கெட்ட ஒழுக்கத்திற் கேதுவாகவும் இருக்கின்றதோ, அங்ஙனமே சுயநயந்துறத்தல் (யாவரிடத்து மன்பு, சமபாவனை முதலியன) நற்குணங்கள் யாவற்றிற்கும்இருப்பிடமாயும்அவற்றின் மூலமாக நல்லொழுக்கத்திற்கேது வாயும் இருக்கின்றது. சுயநயத் துறத்தலுக்கும் நல்லொழுக்கத்தின் ஏனைய அங்கங்களுக்கும், சுயநயம் பாராட்டுதற்கும் தீயொழுக்கத்தின் ஏனைய அங்கங்களுக்கும் உள்ள சம்பந்தம் மேற் கூறியவைகளைக் கொண்டு எளிதிலுணர்ந்து கொள்ளக்கூடிய தாகலின் விளக்காது விடுத்தனம். இப்பொழுது நல்லொழுக்கமின்றி மெய்யறிவு தோன்றாதெனவும் ஆனால் அதனாலேயே மற்றது தோன்றுமெனவும் வெளியாகின்றதன்றோ? இதுபற்றியே நமது சுருதிகளும் நிஷ்காமிய கர்மத்தினாலேயே அந்தக் கரணசுத்தியும், அதனாலேயே ஞானமும் உண்டாகுமெனப் பிரதிபாதிக்கின்றன.

உதாரணமாக:—

"செய்த வினைப்பயன் விட்டிவை தீரா
செய்த லியற்றி யிருப்பவ னேகா
ணுய்ய நினைத்திடு யோகினன் ஞானி"

(இதன் பொருள்:—தான் செய்யாநிற்கும் கர்மங்களின் பலனை இச்சியாதொழித்து அக்கருமங்களை விடாமல் சிரத்தா பூர்வகமாகச் செய்துநிற்பவனே கண்டாய் கடைத்தேறக் கருதிய நல்லயோகியும் ஞானியும்) என்று பகவத்கீதையில் கூறியிருத்தல் காண்க. இவ்வாறு ஒழுக்கத்தினாலேயே மெய்ஞ்ஞானந் தோன்றுவதாயினும், அஃது தோன்றிய பின்னரே ஒழுக்கமும் ஸ்திரதையையும் பூரணதையையும் அடைகின்றது. ஆதலால் மெய்ஞ்ஞானிகளிடத்திலேயே நல்லொழுக்கம்யாவும் குடியிருக்கின்றன, அதனாலேயே அவரைக்கண்டு படிப்பாராயினர் ஏனையோர்.

"நல்லவ னேகேள் உலகுபகாரம் ஞானிகள் விவகாரம்
அல்லது வேறொரு பெறுபேறும் மிலை யதனாற்பிணியுமிலை"

(இதன்பொருள்:—சாதுவே! கேளாய்; ஞானிகள் செய்யும் வியவகாரம் உலகுக்குபகாரமாம். இதுவேயன்றி அவ்வியவகாரத்தால் அவர் அடையாநிற்கும் லாபம் வேறேயொன்றும் மில்லை; துன்பமுமில்லை) என்று கைவல்லியத்தில் கூறியிருக்கின்றது. இத

னாலும் ஒழுக்க மொன்றுகொண்டே ஞானிகளை யறியலாமென் றேற்படுகின்றதன்றோ?

ஆதலின் "யானைவரும்பின்னே, மணியோசைவருமுன்னே" என்பதுபோல மெய்ஞ்ஞானோதயத்திற் கறிகுறியாக ஒழுக்கமே முந்துகின்றது. மெய்ஞ்ஞானமுதிர்ச்சியடையுங்கால் ஒழுக்கமும் முதிர்ச்சியடைகின்றது. இக்கருத்தைக்கொண்டே முற்காலத்திலிருந்த (Socrates) சாக்ரட்டிஸ் என்னும் தத்வசாஸ்திரியார் அறிவே ஒழுக்கமென்றார். ஆனால் சில கல்விமான்கள் அவ்வாமறுத்தார்கள். தற்காலத்திலும் பலர் மறுக்கிறார்களன்றோ? அன்னோர் மறுத்தமைக்குக் காரணம் 'அறிவு' என்பது உலக விஷயங்களின் ஞானமெனக் கொண்டிருக்கின்றனர். அங்ஙனமாயின் அவர்கூறுவது சரியே. ஆனால் சாக்ரட்டிஸ் குறித்தது மெய்ஞ்ஞானத்தையெனத் தோன்றுகின்றது. அங்ஙனம் கொள்ளின் அவர்மொழிந்தது சரியென இதுவரை கூறிவந்த நியாயங்களால் புலப்படுமென்று நம்புகின்றோம்.

நல்லொழுக்க மில்லார் மெய்யறிவுடையாரன்றேல், அவரிற்சிலர்ஞானமுடையோர் விளம்பத்தக்க பலவிஷயங்களைப் பேசுகின்றார்களே யெனின், அவர்பேசும் விஷயங்களினுண்மை அவரால் காணப்பட்டதன்று. பின்னையோ, கண்டபெரியோர் எழுதிவைத்தநூல்களி லுள்ளவைகளைப் படித்துத்தத்தைபோல் திரும்பச்சொல்வதேயாம்; இங்ஙன மிருத்தலின், அத்தகையோரைக்கண்டு மயங்காதொழிதலோடு ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்துமுன்னர், ஞானத்திற் பழகலாமெனும் நம்பிக்கையை அடியோடே விட்டுவிட்டு, முதலில் சன்மார்க்கத்திற் பழக யாவரும் முயல்வாராக. உலகவிஷய அறிவுங்கூட நல்லொழுக்கத்தோடுகூடின் பிரகாசிக்குமே யன்றி, ஒழுக்கமிலதாயிருப்பின், மற்றதும் அவ்வழியிலேயே புகுத்துமாதலின், யாவரும் ஒழுக்கத்தை ஓம்பக்கடவர். அதனாலேயே மெய்ஞ்ஞான மடையப்படும்.

"பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை"

பத்திராதிபர்.

"பச்சைஓந்தியின் நிறத்தைப்பற்றி இருவருக்குள்சச்சரவுண்டாயிற்று. ஒருவன் அந்தப்பனை மரத்திலிருக்கிற பச்சைஓந்திசிவப்பு நிறமென்றான். இன்னொருவன் அதுநீல நிறமுள்ளதேயன்றிச் சிவப்பல்ல என்றான். ஆகவே இவ்விருவருக்குள்ளும் சச்சரவுண்டாகி அந்தப்பனையடியில் வெகுகாலம் வசித்தவனும் இந்தஓந்தியின்நிறத்தை நன்குஅறிந்தவனுமானஒருவனிடம் சென்றுஅவனை நோக்கிஒருவன் ஓந்தியின் நிறம்சிவப்புத்தானே என்றான். இன்னொருவன் அதின்நிறம்நீலம்தானே என்றான். மத்தியஸ்தன் இருவர்சொன்னதும் சரியேயென்றான். பச்சைஓந்திக்குப் பலநிறம் உண்டென்பதை மத்தியஸ்தன் நன்றாய் அறிந்தவனானதால் இருவர்சொன்னதையும் சரியென்றான். அதுபோல் சச்சிதானந்தப்பரம் பொருளுக்குப் பலரூபங்களுண்டு. அவனைஓர்ரூபத்தில் தெரிசித்தவனுக்கு அந்தஒருரூபம்தான் தெரியும். அவனைப் பலரூபங்களில் பார்த்தவன் அவருக்குப்பல ரூபங்களுண்டென்றுரைப்பான். அவர்அநேக ரூபங்களை உடையவர். அவர்ரூபமொன்றும் இல்லாதவர். அவருடைய ரூபங்களை அறிந்தவர்கள் இல்லை"—ஸ்ரீராமகிருஷ்ணர்.
(Sree Ramakrishna)

INTELLIGENCE.

அறிவு.

(144-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இனி, கருத்தென்பது நோக்கம், விருப்பென்பது அந்நோக்கம் பயிறற்கிடம் யாதோ, அதன்கண் நிகழும் உள்ள நிகழ்ச்சி. ஆற்றல் என்பது அவ்விருப்பின்படி முடிக்குந் தகுதி. கருவி என்பது அவ்விருப்பிற்கும் முடிவிற்கும் இடைநின்று, அந்நோக்கம் முடிவெய்துந் துணையுமாளப்படுவது. முயற்சியென்பது கருவிக்கும் முடிவிற்கும் இடையிற் சிறந்துநிற்பது; அது அக்கருவியை ஆளுதல் எனினும் ஒக்கும். முடிவென்பது அந்நோக்கம் முடிந்துநின்ற நிலை.

இவற்றிற்கெல்லாம் முதல் அறிவே யாதலின், அம்முடிவும் அவ்வறிவினுறையிற்றெனவே கொள்ளப்படும்; அன்றனமன்றி, ஏனையவற்றான் ஆவது என்றல் சார்ச்சிவழக்கமேயாம். அறிவேமுதல் என்பது முன்னர்க் காட்டப்படும். ஈண்டு முடிவென்றது உண்முடிந்துநின்றசெயலை; புறத்தேதோன்றும் செயப்படுபொருளையன்று. அச்செயல்தான் புறத்தே தோன்றும் பொருளொடு புணர்ந்து, அப்பொருளினுந் தோன்றும். அததோற்றமே அம்முடிவு. அம்முடிவுதான் முன்னதனைச்சார்ந்தேதோன்றி, அனைதனொடொத்து, அவ்வாறேவழங்கப்படும். ஆகலின், அவ்வழக்கமும் சார்ச்சியினகண்ணதாம். அச்செயல் புணர்ந்துநின்றபொருள் செயப்படுபொருளெனச் சிறப்பித்துக் கூறப்படும்.

இனி, அவ்வாறையும் ஒன்றிலொன் றடக்கிச் சுருக்கவும்படும்; ஒன்றுபலவாய் விரிக்கவும்படும்; அவற்றின்கட் பிறவனைத்து மடக்கவும்படும்; அவற்றி னியல்பறிந்து செய்துகொள்க. ஆயின் இங்ஙனம் வகுத்தல் அவை மயங்காது விளக்கற்பொருட்டு.

அவற்றுள்,

நோக்கமுள்ளமை நெறியும், முறையும் பற்றித் தெளியப்படும். நோக்கமெனினும் கருத்தெனினும் ஒக்கும். கருதவென்னுஞ் சொற்கு இப்பொருள் இடமறிந்து கொள்க. நெறியென்பது இன்னதற்கு இதுவென்னும் அறிவுநிகழ்தல். முறையென்பது இன்னதன்பின் இதுவென்னும் அறிவுநிகழ்தல். இவற்றுள் நெறியே நோக்கத்திற்கு அணித்தாய் அதன் வழித்தோற்றலின் அதனைமுன்னும், அந்நெறிபற்றியே முறைதோற்றுதலின் அதனை அதன்பின்னும் வைத்தவாறு. முறையுண்மை நெறிக்கும், நெறியுண்மை நோக்கத்திற்கும், நோக்கமுண்மை அறிவிற்கும் முறையே அறிகுறியாதல் அறிந்துகொள்க.

விருப்புண்மை முயற்சி மேன்மேலும் பயின்றுநிற்றலாற் றெளியப்படும். விருப்பு உள்ளத்தின் றொழிற்பாடன்றே? அதனை அறிவுத்தொழிலுணர்ச்சிக்குக் கருவிசெய்தல், என்னுக்கொனின்? அறிவு விளக்கத்திற்கும், அதன் றொழில் விளக்கத்திற்கும் அஃதுங் கருவியாய் நிற்றலினென்க. ஐம்பொறியொப்ப உள்ளமும் ஓர்தண்பொறியாகவே கொள்ளப்படும்வன்றொழிக. அற்றாயின், உள்ளத்தினையும், அறிவையும் ஒன்றெனக் கொள்வாரும் உளராலோவெனின், அற்றன்று; அவர் அவை அண்மையும் நுண்மையும்பற்றி ஒன்றோடொன்று மயங்கி நிற்றலை உள்ளவா றுணர்ந்திலின் றேர்த்துணராமையின் அங்ஙனங் கொண்டார். அஃதுண்மையன்று. ஆயின், அவற்றினை வேறுபாடுணர விளக்குக வெனின், விளக்கின் மிகப்பெருகும், அதற்குஇஃதிடமன்று, வாய்த்துழிப்பற்றித் தனித் தாராயப்படும். ஆயின்,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்,

தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்னும் பொய்யா மொழியும் பொய்த்தது கொல்லோ வெனிற் பொய்த்ததின்றாம்; பொறியா னறிவதனைப் பொறியறிவென்றாற் போல்வதோர் சார்ச்சிவழக்கேயாம். என்னை? கண்ணாற் கண்டதனைக் கண்கண்டதென்பவாகலின். ஆயின், நெஞ்சறிவென்பது ஒருபொருளவென்பாமெனின், ஆனாலும். என்னை? தன்னெஞ்சென்றாராகலின். அதுவும் ஒற்றுமைக்கிழமையின்வந்த ஆறன்றொகையெனிற், பொருந்தாது. என்னை? "தன்னைச் சுடும்" எனமேல் இரண்டாவது விரித்தலின். இனி, "நெஞ்சறிய" தென்பதில், நான்காவது மறைந்தாயின்றதெனவே கொள்க. தான்நெஞ்சுகருவியாய் அறிவதுஎன்பதேபொருள். நெஞ்சறிந்ததாயின் அதுவே பின்னர்ப் பொய்த்தல்வேண்டுமெல்லது, 'தான்' என்பதொன்றுபொய்த்தல் வேண்டாமையும் அறிக. அதனைச் சான்றெனக் கொண்ட தெனின், அஃதொக்கும்; அதனைச் சான்றென்பதும் அறியுமென்றுழி, அங்ஙனமறிந்த அதுவே பின்னைப் பொய்க்குமெனவும் படும். படவே, "நெஞ்சறிவது பொய்யற்க" என்பது பற்றி அஃதறியாததனைத் தானென்பது அறிந்து பொய்த்தல் குற்றமாகாதென்பதூஉம் பெறப்படும். அது அம்மொழியுடையார் கருத்தன்று. அற்றன்று, தானும் அறியும், நெஞ்சும் அறியும், தானறிந்ததனை நெஞ்சும், நெஞ்சறிந்ததனைத் தானும் அறியும். ஆயினும் பொய்த்தல் தான் என்பதன்றொழில், அதற்கு நெஞ்சு துணியாது, அங்ஙனம் துணியாமை அதனியல்பு, தான்என்பது பொய்க்குங்கால் அது தடுக்கும், அத்தடைமீறிப் பொய்ப்பி னதனை அது தன்பமெய்துவித் தொறுக்கும். ஆதலிற் றானென்பதொன்று அந்நெஞ்சறியாது பொய்த்தலின்று; நெஞ்சறியாது பொய்ப்பினன்றே அஃதாமென்பதும் படும். அல்லதூஉம் "நெஞ்சறிவது பொய்யற்க" வென்பதுதான்று கொண்டே அஃதறியாதது பொய்க்க வென்பதும் ஆணை பெறப்படுமென்றலும் சாலாதே! எனின், நன்று சொன்னீர். நீர் கூறியவெல்லா நோக்குமாயினும் உண்மை மறந்தீர். என்னை? தன்னெஞ் சென்பதனானே நெஞ்சு அதனுடைமை யாதலே. அதனைத் தலைவன் என்றாற்போலக் கொள்க வெனின், அவனைக் கொண்டு அதனைக் "கடவுளொலி" யென்பாருமுளர்; ஆயினும் அது கொள்ளப்படாதெனபது. என்னை? அதன் தடைமீறுதலும் தானென்பதற்குண்டென்றீராகலின். தடை மீறுவதற்கே தலைமை பெறப்பட்டுத், தடுப்பதற்கது பெறப்படாதென்பது. தான் என்பது கடவுளாற் கொடுக்கப்பட்ட தன்றிமுடைமையின் அது செய்யுமெனிற், றன்றிறமுடைய தொன்று அஃதில்லதினும் உயர்வதன்றே? அஃதில்லதனைக் கடவுட்டன்மை யுடையதென்றல் யாங்ஙனமியைது? அதன் தலைமையும் எத்தகையதாம்! அல்லதூஉம் அதுவும் பொய்ப்பதுண்டு, என்னை? அதுகூறியவெல்லாம் ஒருங்கே உண்மையாமென்றல் சாலாமையின். அது தான் என்பதனோடு செல்வதல்லது, தான் என்பதனை அது செலுத்தாதென்றீராய்த் தான் என்பதனை அஃதொறுக்கும் என்றும் பொய்த்தீர் ஆவீர். ஆதலின் அவர்தங் கொள்கையும் கூற்றும சார்ச்சியின் கண்ணதாம், அன்றேற் போலியாம். அவ்வுண்மை இன்னுஞ் சிறிதுகூர்ந்து நோக்கின் விளங்கும். அஃதாயின் அற்றாகுக; நெஞ்சைச் சான்றென்று நீவிரும் உடன்பட்டதென்னையெனின், ஒருவனெழுதிய எழுத்து அதனெழுதியவன் கருதியபொருளை அவனெழுதியபொழுதும் அதன்பின்பும். அவன் கருதியதற்கு மெய்ச்சான்றாய் நின்று அவற்குணர்த்துதல் கண்கூடாகக் கண்டாமன்றே? அதுபோலவே தான் என்பது தானுணர்ந்ததனைத் தன்னெஞ்சின்கண் ணெழுத்தும்; அவ்வா றெழுதப்பெற்ற நெஞ்சு தானறியாதே கருவியாய்த்

தன்முதலாகிய நான் என்பதற்குணர்த்தும், அவ்வுணர்ச்சி தான் என்றதற்கு நெஞ்சக்கு வியாய்வருதலின் அதனைத் தன்னெஞ் சறிகதென்றல் சார்ச்சின் பாற்படும். அற்றாயின் அவ்வாறே கண்முதலியவற்றினைப்பற்றிக் கூறுதுமேனின் அஃதொக்கும், அதுவும்வழக்கின்கண் உள்ளதே, ஆதலின் அன்மையும் தன்மையும் பற்றி அவர்அங்ஙனம் அருளியது நுட்பமும் நுட்பமும் பொருந்தியதோர் ஒப்பவழக்கேயாம். அதுபற்றி விஞ்ஞவென்னை?

ஆயிற் பொய்த்தல் நெஞ்சினழுந்துதலேயன்றி நான் என்பதில் அழுந்துதலின் றேவெனின், ஆண்டழுந்தியதனை அது நெஞ்சினழுத்தும், அது முகத்தினகணழுத்தும்; ஆண்டுமே தோன்றும். அவ்வாறு தோற்றுதல் மிகமறைந்தும், சிறிது அல்லது பெரிதும் வெளிப்பட்டும் நிற்கும்.

[இன்னும்வரும்]

கி. பா. சிவராமபிள்ளை.

"குருதன்சிஷனுக்கு சகலஜீவனுக்குள்ளும் கடவுளிருக்கிறார்என்று உபதேசித்தார். சிஷ்ய் இதின் கருத்தை நன்றாய் அறியவில்லை. அவன் ஒருவீதிவழியே செல்லுகையில்ஒரு யானை அவனுக்குஎதிரேவந்தது. யானைமாவுத்தன் இவனைநோக்கி "தள்ளிப்போ" என்றுகூவமிட்டான். சிஷனோ, தனக்குள்ளும்கடவுள் இருக்கிறார், யானைக்குள்ளும் கடவுளிருக்கிறார் என்று எண்ணிக்கொண்டேசாவகாசமாயிருந்தான். தான்கடவுளைக்கண்டு எதற்காகப் பயப்படவேண்டுமென்றும் எண்ணினான். யானை இவன்கழுத்தைப்பிடித்துத்தூக்கி அடித்தது. இவனுக்கு வலுத்தகாயம் உண்டாயிற்று. குருவினிடம்சென்று நடந்ததை நிகழ்த்தினான். குரு சிஷனைப்பார்த்து, நீநினைத்தது சரிதான்; உன்னிடத்திலும் கடவுள் தானிருக்கிறார்; யானையினிடத்திலும் கடவுள்தானிருக்கிறார். ஆயினும் மாவுத்தனைக் கொண்டு உனக்கு அவர்எச்சரித்தாரே. நீயேன்அதைக் கவனிக்கவில்லை என்றுசொன்னார்"—ஸ்ரீராமகிருஷ்ணர் (Sree Ramakrishna).

*
**

"பலரும்பனிக்கட்டியைப்பற்றிக் கேட்டிருப்பார்களே தவிர அதைப்பார்த்திருக்கமாட்டார்கள். அதுபோலப்பல போதகர்களும் பகவானின் இலட்சணங்களை சாஸ்திரபூர்வமாகப் பார்த்திருப்பார்களேதவிரபிரத்தியக்ஷமாய்த் தெரிசித்திருக்கமாட்டார்கள். பல சமயபோதகர்களும் பகவானின் மகிமையைச் சிறிதுஅறிந்தவர்களேயன்றி அவைகளின்மூலத்தை அறிந்தவர்களில்லை. பனிக்கட்டியைப்புசித்தவன்தான் அதுஇன்னதைப் போலிருக்கிறதென்று சொல்லுவான். அதுபோல் அன்பனும் ஊழியனும் பக்தனும் பகவானைப் பலவிதமாய்த் தெரிசித்தவன்தான் அவருடையபல இலட்சணங்களைச் சொல்லக்கூடும்"—ஸ்ரீராமகிருஷ்ணர் (Sree Ramakrishna).

*
**

"அறியாமையையும் அதன் தோற்றங்களையும் தவிர வேறு தீமை யில்லை; அறிவையும் அதன் தோற்றங்களையும் தவிர வேறு நன்மை யில்லை"—மைண்ட் (Mind).

LOVE NOT THE WORLD.

உலகம் விரும்பேல்.

எல்லாப் புராணங்களிலும் இந்த உலகம் தீமை நிறைந்த உலகமென்றும் அதிலிருந்து விலகிக் கொள்ளுவது நன்மையென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய தற்கால வாழ்க்கையைப் பற்றியுள்ள பொதுவான அபிப்பிராயம் "எல்லாம் தீமைக்கே" என்னுமிருளால் மூடப்பட்டிருக்கிறது. அதாவது நமது வாழ்க்கை முன் செய்த பாவங்களினால் உண்டான தாகவும், இந்த உலகம் துன்பம் நிறைந்த வீடென்றும் எண்ணப்படுகின்றன. "உலகம் விரும்பேல்" என்னும் வசனத்தைச் சிலர் தப்பிதமாயுபதேசிப்பதையும், சிலர் தப்பிதமாய்க் கிரகிப்பதையும் நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். பல மதங்களிலும் அதேவசனம் உபதேசிக்கப் பட்டிருக்கின்றது. அதனுண்மையான அர்த்தத்தைக் கிரகித்து அவ்வாறொழுகுவோமாயின் சஞ்சலமாதியன அற்று, நாம் அதிகப் பரிசுத்தத்தை யடைவதோடு துன்பம் நிறைந்ததாகத் தோன்றுமிவ்வுலகும் அத்தியந்தம் சுகத்தைத் தருவதாயும் பரமதயா நிதியாகிய கடவுளின் அன்பையும் இரக்கத்தையும் அனுபவிப்பதற் கேற்ற இடமாகவும் நமக்குத் தோன்றும்.

உலகமென்றால் என்ன? சாதாரணமாய் நாம் வசிக்கும் அண்டமும் இன்னும் எண்ணிறந்தனவும் சேர்ந்த இப்பிரபஞ்சமென்றே ஆகின்றது. அதாவது சோதிமயமான சூரியப்பிரகாசம், தண்மையைக் குளிர்ந்த சந்திரப்பிரகாசம், மகத்தான மலைகள், காடுகள், பள்ளத்தாக்குகள், மாறிமாறி வராநின்ற பருவ பேதங்கள், ஆகாயத்தில் பறக்கும் அழகான பக்ஷிகள், காடுகளிற் சஞ்சரிக்கு மிருகங்கள், இவையெல்லாம் நிறைந்து அழகு செய்யாநின்ற இப்பூமியாதியனவும். நாம் விரும்பக்கூடாத உலகம் இதுவா? நிச்சயமாய் இல்லை. இயற்கையான உலகத்தை விரும்ப வேண்டாமென்று சொல்வது கடவுளை நேசிக்க வேண்டாமென்று சொல்லுவதற் கொப்பாகும். ஏனெனில் அவரால் விளங்கா நின்ற இவ்வுலகத்தினின்றே அவரைப்பற்றியும், சகல பிராணிகளிடத்தும் அவர்க்குள்ள இடையறா அன்பைப் பற்றியும் சிந்தித்தேனும் நாமறிகிறோம்.

உலகமென்பதின் மற்றொரு தாத்பரியம் அதிலிருக்கிற ஜனங்களைக்கொள்ளலாம். ஆகவே உலகத்தை நேசிக்கிற தென்றால் நமது சகோதரர்களினுடைய இன்பத்தையும் நன்மையையுங் கருதி அவற்றை லபிக்கச்செய்யும் முயற்சி யெடுத்தலென்றாகின்றது. அப்படியானால் துன்பம் அடைந்தவர்களைப் பற்றிப் பரிதாபப்படுதல், உதவியற்ற விதவைகட்குச் சகாயஞ்செய்தல், தாய் தந்தையரில்லாச் சிறுவர், சிறுமிகளைக் காப்பாற்றுதல், கல்வியற்றவர்களுக்கு வேண்டிய உதவிபுரிதல், குற்றமற்றவர்களை அநியாய தண்டனையிலிருந்து விடுவித்தல், அறியாமை என்னும் இருளால் மூடப்பட்டு பகவத் ஸ்மரணையே இல்லாது திரியும் ஜனங்களுக்கு நல்லறிவும், ஈசுவர பக்தியும் உண்டாகும்படி செய்தல், இவைகளல்லவா உலகத்தை நேசித்தல் என்பதின் பொருளாகும்? இவ்விதம் நேசித்தல் கூடாதென்று ஆக்ஞாபிக்கப் பட்டிருக்கிறதா? இல்லை, இல்லை. ஒவ்வொரு மதத்திலும் பிறரை நேசிக்கும்படிதான் சொல்லப்பட்டிருக்கிறது. பகவானுக்கு ஊழியஞ்செய்தல் என்பது ஜீவர்களுக்கு ஊழியஞ் செய்தலைத் தவிர வேறே என்ன? நமது சகோதரர்களுக்கு ஊழியஞ் செய்தலே கடவுளுக்கு ஊழியஞ் செய்தலாகும். நாம் நமது சகோதரர்களைப் பூரணமாய் நேசித்தாலென்ன? அதனால் கடவுள் நம்மைக் கோபிப்பாரா? அவர் பொறுமை யுடையவரல்லவோ.

உலகம் என்பதற்கு வேறொரு அர்த்தம் மனிதனுடைய தொழில் எனவும் சொல்லுவார்கள். உலக சம்பந்தமான தொழில்களில் நாம் கழிக்குங் காலமெல்லாம் வீண் காலமென்று அநேகர் அபிப்பிராயப் படுகிறார்கள். அதாவது பரிசுத்தமான பகவானை இடைவிடாமல் தியானம் செய்யாது பிரயோஜனமான தொழிலில் காலத்

நைப் போக்காமல் வீணே கழிப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் இது ஏகபக்ஷமாகத் தான் இருக்கிறது. உண்மையான தியானம் ஆத்மப் பிரகாசத்தை யதிகப்படுத்தி, நமது வாழ்க்கையை உயர்த்துவதற்கு சுலபமான மார்க்கமே. ஆயினும் அஃது ஓர் மார்க்கமே தவிர முடிவு அல்லது பயனல்ல. தியானத்தினாலும் கடவுளின் அநுபவத்தினாலும் உயர்ந்த சக்திகளை யடைந்து, நாம் உலகத்திற் சென்று பாவச்செயல்களைக் கண்டித்தும், அறியாமையைப் போக்கியும் ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டிய தலைமையாயிருக்கிறது. அப்படிச் செய்வதே நமது வாழ்க்கைப்போரின் வெற்றியாயும் கிடைத்தற் கரிய பயனாயுமிருக்கின்றது. ஒவ்வொருவரும் தொழிலைக் கேவலமாக நினைத்து விட்டுவிட்டால் யாவர்க்கும் அசௌகரியம் நிச்சயமாயுண்டாகும். நமது தேகத்துக்கு வேண்டியவைகளைச் சௌகரியம் செய்து கொடுப்பதற்கு மனிதர்களிற் சிலர் வேலை செய்யாவிட்டால், நமது வாழ்க்கைக்கு அவசியமான சாப்பாடு, உடை முதலியவைகளும் நமக்கு எவ்விதம் கிடைக்கும்? எவ்வளவு இழிவான தொழிலும் கடவுளாலேயே நியமிக்கப் பட்டதா யிருக்கிறது. நாம் அதை விசுவாசத்தோடு செய்து முடிப்போமானால் அது கடவுளுக்கு ஊழியமாகவும் மனிதர்களுக்குப் பேருதவியாகவு மிருக்கும். பணமோ, அந்தஸ்தோ சம்பாதிப்பதற்காகச் செய்யப்படுகிற முயற்சிகளில சுயநயத்தையே கருதி, பிறர்நயத்தைக் கவனியாமல் தள்ளிவிடுவோமாயின், அது தன் பற்றைத் தான் உண்டாக்கும். சுறுசுறுப்பா யிருப்பதற்குத் தொழில் மிகவும் அவசியம். அதில்லாவிட்டால் நம்முடைய இயற்கை மந்தகதியாகி, மிருகத்தின் சுபாவத்தையடையும். ஒருவேளை நாம் குற்றவாளிக ளாகவேண்டி வந்தாலும் வரும். "சோம்பேறிகள் செய்வதற்காக ஏதாவது ஒரு அக்கிரமத்தைச் சாத்தான் கண்டுபிடித்து வைத்திருக்கிறான்" என்று டாக்டர் வாட்ஸ் (Dr. Watts) கூறுகிறார். இது வரை சொல்லி வந்த விஷயங்களை விரும்புதல் தகாதென "உலகம் விரும்பேல்" என்னும் வாக்கியம் போதிக்கவில்லை என்று இப்பொழுது அறிகிறோமல்லவா? பின் எது கூடாதென்றால், உலகப்பொருள்களின் மேல் அளவில்லாத ஆசை வைத்து அவற்றினின்றும் உண்டாவனபோல் தோன்றுகிற விஷயசுகங்களில் அமிழ்தலேயாம். இதனால் நாம் அவைகளை வெறுக்கவேண்டியதென்றும் அனுபவிக்கக் கூடாதென்றும் ஏற்படுகின்றனவா? மண்ணையோ, பெண்ணையோ, பொன்னையோ நாம் வெறுத்துத் தள்ளிவிட வேண்டுமென்றோ பெரியோர் கூறுவது? அல்ல, அல்ல. ஆனால் அவற்றினிடத்தில் நாம் வைக்கும் அதிகப் பிரியத்தாலுண்டாகும் பற்றையே நீக்கச் சொல்லுகிறார்கள். நமதாசைக் குரியனவாயிருக்கும் பொருள்களில் யாதொரு தீங்குமில்லவே யில்லை. ஆனால் ஆசையானது அளவுக்குமிஞ்சினால் கெடுதியை உண்டாக்குகிறது.! எல்லாப் பொருள்களிடத்திலும் சமமாக நாம் பிரியம் வைத்திருப்போமானால் நமக்குக் கெடுதி யேது? துக்கமேது?

ஆகையால் இனியாவது உலகம் துன்பம் நிறைந்ததென்று நினையாமல், நாம் ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் செய்யும்படிக்கும், அளவு கடந்த கருணையினால் பகவானாகிய நமது பிதா நமக்களித்திருப்பவற்றால் நமது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானவைகளை அனுபவித்துக் களிக்கும்படிக்கும், அவராலேயே நமக்காக ஆக்கப்பட்ட ஓர் இன்பகரமான வீடென்று எண்ணுவோமாக. கடவுளை மறந்து விட்டு, விரும்பத் தகாததான சிற்றின்பத்திலேயே செல்லும் நமது நாட்டத்தைத் தடுத்து, நமக்கு எல்லாச் சுகங்களையும் அளித்துவரும் பரமபிதாவாகிய பகவானிடத்தி லன்புடையவராய் நாம் காணும் ஒவ்வொரு பொருளிலும், நமமுடைய ஒவ்வொரு சகோதரரிடத்திலும், நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலிலும், அவனைக் கண்டு ஆனந்தித்து, அவர்க்கு எப்பொழுதும் நன்றியறிதலுள்ளவராயு மிருப்போமாக.

C. முத்துசுவாமிப்பிள்ளை.

THE LATE HONORABLE MAHADEV GOVINDA RANADE.

கனம் மஹாதேவ கோவிந்த ரனடே.

இவ்வுலகத்தின்கண் மேலான மனித ஜென்மத்தில் உதித்தவர்களில், தத்தம் சுயத்தையே கருதி, தமது வாணாள்களை யெல்லாம் வீணாள்களாகக் கழியாது, தம்மைச் சார்ந்த பந்துக்கள், மித்திரர்கள், சுவதேசத்தார், பரதேசத்தார் ஆகிய சகல மாந்தர்களுக்கும் நன்மை புரிவதே தொழிலாகக்கொண்டு, அவர்களுடைய சுகதுக்கங்களைத் தம்முடைய சுகதுக்கங்களாகவே நினைத்து, இகத்திலும் பரத்திலும் அடையவேண்டியதான சுகத்தைக் கொடுக்கத்தக்க மார்க்கங்களில் அவரை நடாத்தியும், அவ்வித சன்மார்க்கங்களில் தாம் நடந்து காட்டியும், தேசநன்மை, சகவிர்த்தி முதலிய பரோபகாரச்செயல்களையே எப்பொழுதும் செய்வதில் ஆசையும், நோக்கமும், மனோகுதூகலமும் உடையவர்களன்றோ பெரியோ ரெனப்படுவோர்? தற்காலத்தில் அத்தகைய மேலோர் பலர் இலர் என்பது யாவரும் அறிந்த விஷயமே. உள்ள சிலரில் நாயகமாய் விளங்கிய மஹா தேவ கோவிந்த ரனடே என்பவர் காலஞ்சென்றாரெனக் கேட்டின் எவர்தாம் பரிதபிக்காதவர்?

இம் மஹானுபாவர் கோல்ஹாப்பூர் மஹாராஜாவினிடத்தில் காருபாரியாயும் ஒரு கீர்த்திபெற்ற வம்சத்தைச் சேர்ந்தவராயுமிருந்த கோவிந்த அமிர்தரனடே என்பவர் செய்த தவப்பயனால் 1842ம் வருஷத்தில் அவருக்குப்புத்திரனாக ஜனித்தார். அவர் கோல்ஹாப்பூரில் வித்தியாப்பியாசம் செய்ய ஆரம்பித்து, பதினான்காம்வயதில் எல்பின்ஸ்டன் கலாசாலை (Elphinstone College)யில் சேர்ந்து கல்விகற்றுவந்தார். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்பதுபோல் அவர் சகல பரீக்ஷைகளிலும் முதல்வராயிருந்ததுமல்லாமல் ஒவ்வொன்றிலும் முதற்சம்மானம் வாங்கியும், அக்கலாசாலையிலுள்ள ஐரோப்பிய ஆசிரியர் யாவரும் அவர்பிற்காலத்தில் உலகநன்மைக்காக உழைப்பவருள் தலைவராய் நின்று ஆச்சரியப்படும்படியான அநேக சீர்திருத்தங்களைச் செய்யும் ஆற்றலுடையவரென மதிக்கும்படி தமது விவேகத்தையும் நல்லொழுக்கத்தையும் காட்டியும் வந்தார். பம்பாயில் சர்வகலாசாலை ஸ்தாபனமானபின் முதலில் பி.ஏ (B.A.)பரீக்ஷையில்தேறினவர் இவரே. பின்னர் அப்பரீக்ஷையில்தேறினவர் அநேகரிருந்தாலும் அவர்கட்கெல்லாம் இவரே புத்தியிலும், ஒழுக்கத்திலும், வல்லமையிலும் தலைவராயிருந்தார். இவர் எம். ஏ., எல். எல். பி. (M. A, L. L. B.)முதலிய பரீக்ஷைகளிலும் தேறினபின்னர் அவர் கற்றுவந்த எல்பின்ஸ்டன் கலாசாலையிலேயே முதன்மைப் பண்டிதராய்ச் சிலகாலமிருந்து, 1866ம் வருஷம் மே மாசத்தில் கவர்ன்மெண்டுக்கு மராத்திபாஷை மொழிப்பெயர்ப்பாளரானார். பின்னர் 1867ம்வருஷம் ஜூன் மாசத்தில் கோல்ஹாப்பூர் நியாயாதிபதியாய்ச் சொற்பகாலமிருந்து அடுத்த வருஷம் மார்ச்சு மாசத்தில் பழைய கலாசாலையில் ஆங்கிலபாஷை கற்பிக்கும் ஆசிரியரானார். ஆங்கிலம் அவருக்கு அன்னியபாஷையாயிருந்தபோதிலும் அதில் மிகவும் தேர்ச்சியுற்றவராயும், அப்பாஷையை உயர்தரக் கல்வியிலும் மாணாக்கர்களுக்குப் போதிப்பதில் அக்கலாசாலையிலிருந்த மற்ற ஐரோப்பிய ஆசிரியர்கள் அவரைக்கண்டு பொறிக்கும்படியாய் அவ்வளவு சாமர்த்திய முடையவராயுமிருந்தார். இவ்வேலையிலிருக்கும் மத்தியில் சிலகாலம் போலீஸ் மேஜிஸ்டிரேட்

(Police Magistrate)டாகவும், பின்னும் சிலகாலம் ஸ்மால்காஸ் கோர்ட்டு (Small Cause Court) ஜட்ஜியாகவும் இருந்திருக்கிறார். 1871ம்வருஷமுதல் பூனாவிலும் பின்னும் சில இடங்களிலும் சப்ஜட்ஜி (Sub-judge) வேலையிலிருந்து, 1884ம் வருஷத்தில் பூனாஸ்மால்காஸ்கோர்ட்டு ஜட்ஜியானார். அவர் கணிதத்தில் நிபுணராயிருந்தமையால் 1886ம்வருஷத்தில் இந்தியன்பணவரவைப் பரிசோதிக்கும் கமிட்டி (Indian Finance Committee)யில் ஒருஅங்கத்தராக இந்தியாகவர்ன்மெண்ட் (Government of India)டினால் தெரிந்தெடுக்கப் பட்டபொழுது, அவ்வேலையில் அவர்காண்பித்த புத்தி சாதுரியத்தையும், திறமையையும் கவர்ன்மெண்டார் கண்டு மெச்சி அவருக்கு ஸி. ஐ. இ. (C I.E) என்ற பட்டத்தை அளித்தார்கள். அப்பால் பம்பாய் சட்டநிரூபணசபை (Legislative Council)யில் ஒரு அங்கத்தராக நியமிக்கப்பட்டனர். அங்கும் கவர்ன்மெண்டார் மெச்சும்படியாகவே தமதநுபவத்தை அவர்களுக் கெடுத்துக்காட்டி வேண்டியுதவி புரிந்துவந்தார். 1893ம்வருஷத்தில் பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜி (High Court Judge)யாக இருந்த கனம் டிலாங் (Hon K. T. Telang) காலஞ்சென்ற பின் அவ்வேலையில் நியமிக்கப்பட்டு மரிக்கும்வரை அதிலேயே இருந்தார்.

இவர் தேசாபிமானியாயும், பரோபகாரசீலராயும், கடவுளினிடத்து மிகுந்த பக்தியுடையவராயுமிருந்தார். தற்காலத்தில் நமக்குள் கற்றவர்கள் கலாசாலைகளைவிட்ட பின் தமதுகாலக்ஷேபத்தை உத்தேசித்து, ஒவ்வொருவரும்தத்தம் தொழில்களைக் கவனிக்கிறார்களே யன்றி, தம் அறிவுவிர்த்தியைக் கவனிக்கிறவர்கள் மிகவும்சிலர். அவ்விதம் கவனிப்பவருள்ளும் பொதுநன்மைக்காகத் தமது நேரத்தைச்செலவு செய்பவர்மிகவும் சிலர். ரனடேயோ, தமதுவிசாலமான அறிவுடனும், தவறுதலில்லா ஞாபகசக்தியுடனும் உலகிலுள்ள சகலசங்கங்களையும் அவைகளுடைய முயற்சிகளையும் நுட்பமாய் அறிந்ததுமன்றி நமது தேசத்திற்கு எவை எவை ஆவசியகமெனத் தெரிந்தெடுத்து அவைகளை யாவருங்கைக்கொள்ளுமாறு போதித்தும் வந்தார். இவரைப்போலவே கல்வியறிவில் சிறந்தவரும், இவருடைய பால்ய சிநேகிதரும், பரோபகார,நற்குணநற்செய்கைகளுள்ளவருமான டாக்டர்பந்தார்க்கர் (Dr Bhandarkar) என்பவரும் இவரும் குணங்களில் தாரதம்மியமில்லாது ஒரேதன்மையராயிருந்தபோதிலும் பொதுஜன ஆசாரசீர்திருத்தத்தை நடைபெறச் செய்யும் விதங்களில் மாத்திரம் அபிப்பிராய பேதமுடையவராயிருந்தனர். அதாவது ரனடே என்பவர் தாம்போதிக்கும் சீர்திருத்தவிஷயங்களை, எல்லாரும் உடனே கைக்கொள்ளாவிட்டாலும் "அடிமேலடி யடிக்க அம்மியுமகலும்" என்பதுபோல் அடிக்கடி போதித்து வந்தால் சிறிதுகாலத்தில் யாவரும் கைக்கொள்வாரென்னும் அபிப்பிராயத்தால், தமது எண்ணம் முற்றுப்பெறாமலிரா ஜனங்களுக்கு உபதேசிப்பதே தமதுகடமை யெனவும், உசிதமெனவும் கருதி, ஜனங்கள் பின்பற்றுமுன்னர் எச்சீர்திருத்தவிஷயத்தை யேனும் தாம் கைக்கொண்டதாகக்காண்பிக்கின் அவருடைய அப்பிரீதிக்கு ஏதுவாகுமாதலால் அங்ஙனம்செய்யாது அவர்கள் நன்னிலைமையை அடையுங்காலத்தை எதிர்பார்த்திருப்பார். பந்தார்க்கரோ ஜனங்களுடைய அதிருப்தியை எதிர்பாராதவராய், கைக்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்களை ஜனங்களுக்குப் போதிப்பதுடன் தாமும் அவைகளைக் கைக்கொண்டொழுகிக் காண்பிக்கவுஞ்செய்வார். இதுவே இவ்விருவருக்கு முள்ள பேதம். அபிப்பிராயம் பேதமாயிருப்பினும் இவ்விருவரும் பரோபகாரநிமித்தம் அவதரித்தவரெனவே கூறலாம். நந்நன்மைக்காகப் பாடுபட்ட ரனடே என்பவர் காலஞ்சென்றாரென்பதில் நமக்குண்டாகும் அருந்துக்கம், நமது க்ஷேமத்திற்காக உழைக்கும் பந்தார்க்கர் என்னும் ஓர்பிரபு நமதுமத்தியிலிருக்கின்றாரென்பதினாலன்றோ சிறிதுசாந்தியடையத்தக்கதா யிருக்கின்றது? இது நிற்க.

ரனடே யென்பவர் யாதொரு காசவார்த்தையும் அறியாதவராயும், வீண்காலம்போக்காதவராயும், எப்பொழுதும் ராசப்பணியிலேயே அதிகப்பிரீதியுடையவராயும் இருந்தார். அவரது உள்ளத்தின் உண்மையை அறிந்தவர் அவரது விசித்திரபுத்தியையும், விசேஷகுணத்தையும்பற்றி அதிகம்பேசாமலிரார் என்பது திண்ணம். இவரைப்போல் அஹங்கார மற்றவரும், கபடமில்லாதவரும், குழந்தையின் ஸ்வபாவத்தையுடையவரும் எவரும் இரார், இரக்கத்தின் வடிவமே அவரெனக்கூறலாம்.

இவர் பிரம்மசமாஜத் (Bramha Samaj) தின் ஓர் பிரிவாகிய பூனாவிலுள்ள பிரார்த்தனை சமா (Prarthana Samaj) ஜத்தைச்சேர்ந்தவர். அச்சபையில் இவர் பலசந்தர்ப்பங்களில் ஜனங்களுக்கு மெய்ஞ்ஞானத்தை யுண்டுபண்ணத்தக்க பிரசங்கங்கள் செய்திருக்கிறார். அவைகளுள் "மரணமென்பதென்ன" என்பதைப்பற்றிய தொன்று. அதில் அவர்சொன்னதாவது:—"துக்காராம் (Tukaram) என்னும் மஹாநுபாவர் "என்னுடைய மரணம் மரணமடைந்தது இனி எனக்கு மரணமில்லை" என்று கூறியதுபோல் நாம் மரிக்கத்தக்கமரணமொன்றும் நம்மிடத்தில் மரிக்கத்தக்க மரணமொன்றும் ஆக இரண்டு மரணங்களுள. பிரார்த்தனை செய்யும்பொழுதோ, மற்றவர்க்குபதேசிக்கும் பொழுதோ, முனிகள் தற்போதமிழந்து ஆத்மாகாரமாயிருக்கிறார்கள், வித்வான்கள் மேலான விஷயங்களைப்படிக்கும்பொழுது சரீரத்தைமறந்து, தாம்படிக்கும் விஷயாகாரமாகவே யிருக்கிறார்கள்; முக்கியமான வேலையைச் சிரத்தையுடன் செய்துகொண்டிருக்கு மொருவன் தனது சரீரத்திலுள்ள ரோகத்தின் கொடுமையையும் மறந்து தான் செய்யும் வேலையின் வடிவமாகவே யிருக்கிறான்; இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் மரணம் மரணத்தையடைகின்றது. ஸ்தூல சரீரத்தை விட்டுப்பிரியுங் காலத்திற்றான் ஒருவன் மரணமடைகிறானென்று சாதாரண ஜனங்கள் சொல்வது மரணத்தைப்பற்றிய உண்மையான கருத்தல்ல. பின்னையோ, நாம் மரணமடைதல் எப்பொழுதெனின், எந்நிமிஷத்தில் நமது சரீரத்திற்காகவும் அதற்குவேண்டிய சுகங்களைச் சம்பாதித்தற்காகவும் சுயநயத்தால் தூண்டப்பட்டு அறிவீனமாயும் கேவலமாயும் பிரவர்த்திக்கிறோமோ அந்நிமிஷத்திலேதான் நாம் மரணமடைந்தவர்களாகிறோம்" என்பதே. இவருடைய மொழிகளை நாம் ஆழ்ந்து யோசிப்போமாயின் அவைகள் உண்மையைப் போதிக்கின்றன வென்பதற்கென்னதடை? அங்ஙனமாயின் அவர் மரித்துப் போனதாக நாம் எங்ஙனம் கூறலாம்? அவர் சரீரத்தோடு நமக்கு மத்தியில் முன்னிருந்தது போலவே இப்பொழுதும் அதிக ஸ்திரமாய் ஜீவித்திருக்கிறார். அவர் உபதேசித்ததைப் பின்பற்றி நாம் ஒழுகுவோமானால் இப்பொழுதுதான் அவருடைய பிரகாசம் அதிகமெனக்கூறலாம்.

மதசம்பந்தமான ஆராய்ச்சியில் தேர்ச்சியுற்ற பெரியோர்கள் முற்காலத்திலுமிருந்திருக்கிறார்கள்; தற்காலத்திலும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிற் பெரும்பாலார் பொதுஜன நன்மையைக்கருதாது, உலகம் அநித்தியமெனக் கொண்டு தங்கள் தங்கள் காரியத்தையே பார்ப்பாராயினர். இவரோ அங்ஙனமன்று. உலகநன்மையிலேயே தமது நன்மையும் உண்டெனக்கருதி ஜீவகாலமுழுவதையும் பரோபகாரச் செயல்களிலேயே செலுத்துவராயினர். அவருடைய அபிப்பிராயத்தைப் பலர்மறுத்தாலும், பரிகசித்தாலும் அல்லது அதினை நடைபெறச்செய்வதில் கஷ்டங்களோ, இடையூறுகளோ நேரிட்டாலும் சிறிதும் பின்வாங்காமலும், மனம் கலங்காமலும் தாம் கொண்ட கருத்தைச் சாவதானமாய் நிறைவேற்றும் சமர்த்தராயிருந்தார். ஒருகாலத்தில் அவர் சொன்னதாவது:— "நமது தற்காலத்திய வாழ்க்கைக்கு முன்னேபின்னோ, நாம் ஜீவித்தோ ஜீவிப்பதோ இல்லையெனச்சிலர் சொல்லுகிறார்கள், வேறுசிலர் நமது தற்காலத்திய வாழ்க்கை முடி

வின் பின்னர் நமது சந்ததிகளிடத்திலேயே நாம் ஜீவித்திருப்பதாகக் கூறுகிறார்கள். இவ்விரண்டு கொள்கைகளும் பசிக்கு அன்னம் கேட்டால் கல்லைக் கொடுப்பது போலிருக்கின்றன. ஆகையால் நாம் இவைகளைவிட்டு வேறொருகொள்கையைக்கைப்பிடிக்கவேண்டும். அது நாம் நித்தியமாயுள்ளவராகக் கருதிப் பாடுபடுவோமாயின், இவ்வுலகத்திலே தானே அல்லது அடுத்த உலகத்திலோ நாம் இதிலும் மேலான நிலையை அடைவோமென்பதாகின்றது".

"துன்பத்தைச் சகித்தல், அன்பாயிருத்தல், பொறாமையில்லாதிருத்தல், சுயபயம் பாராட்டாதிருத்தல், சுளுவில் கோபமுணர்வுபெண்ணப் படாதிருத்தல், பிறர்க்குக்கேடு நினையாதிருத்தல், அநீதம் செய்யாதிருத்தல், யாவற்றையும் சகித்தல, சத்தியத்தில் சந்தோஷித்தலாகியனவே தர்மம் எனறழைக்கப்படும்" என செயின்ட்பால் (St. Paul) என்பவர் கூறியதுபோல தர்மத்தைக் கடைப்பிடித்தவர் இவரே யெனக்கூறலாம். இவர்யாரோடேனும் கடுஞ்சொல் பிரயோகித்ததாகக் கூறுபவர் எவருமிலர். இவருடைய பொறுமையை நன்குவிளக்குதற்குக் கதம், யானுங்கூடவிருந்து நேரில் கண்டதுமான ஒரு விஷயத்தைக் கேட்க நமது நண்பர்கள் ஆவலுடையவராயிருப்பாரென நினைக்கின்றேன். அதாவது காங்கிரஸ் (National Congress) சபைகூடுங் காலங்களிலெல்லாம் அச்சபை கூடிப்பிரிந்த பின்னர் அவ்விடத்திலேயே இந்திய பொதுஜன ஆசாரச் சீர்திருத்தசபை (Indian Social Conference) கூடுவது வழக்கம். அவ்விதம் நடந்துவர, பூனாவில் காங்கிரஸ் கூடியகாலத்தில் அச்சபைகூடும் பந்தரில், ஆசாரச் சீர்திருத்த சபை கூடுவதற்கு இடங்கொடுக்கப்படாதென அப்பட்டணத்திலுள்ள சிலர் கூறிவிட்டார்கள். அப்பொழுது ஆசாரச் சீர்திருத்த சபையை ஸ்தாபித்தவருள் அதற்குத் தலைவராயிருந்தவருமாகிய இவர் உடனே வேறு பந்தர்ப்போடும்படி ஏற்பாடுசெய்து அதில் சபை கூடிய பின்னர் பிரசங்கஞ்செய்ய எழுந்தார். இவர் எழுந்ததும் சகல ஜனங்களும் அச்சபை காங்கிரஸ் பந்தரிற்கூடுதற்கு இடையூறுசெய்தவர்களைத் தூஷிப்பாரெனயாவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் இவரோ அவர்களை அற்பமேனும் தூஷிக்காமல் அவர்கள் செய்ததைப் பொறுக்கவேண்டுமென்றும் அதுவே மேலானதென்றும் யாவர்க்கும் போதித்ததோடு தாமும் அவ்விகற்பத்தைச் சிறிது முணராதவராய், மிகவும் சாந்தத்தோடு உபந்நியாசித்தார் என்பதே.

இவர் பிரார்த்தனைசமாஜத்தைச் சேர்ந்தவராயினும் சிலசமயங்களில் ஹிந்து ஆலயங்களிற் சென்று புராணப்பிரசங்கம் செய்வார். சிலசமயங்களில் ஆரியசமாஜ(Arya Samaj)த்திலே சென்று பிரசங்கிப்பார். இவ்விதமாக யாதொருமதத்திலும் துவேஷமில்லாதவராயிருந்தார். குருநானக்(Guru Nanak)கென்பவர் கூறியதுபோலவொருகாலத்தில் அவர் சொன்னதாவது:—"நான் இந்துவாயும் முஸல்மானாகவுமிருக்கிறேன்."

நண்பர்களே! கவனியுங்கள். இந்நகையமேலான அபிப்பிராயங்களையெல்லாம் நமதிடையிற் பிரசங்கித்து நமக்காகவே ஜீவித்திருந்த அப்பெரியோர் அடுத்த உலகத்திலோ அல்லது எவ்விடத்துமோ நிர்ப்பரராயிருப்பவராயினும் நமது கண்கள் அவருடைய தோற்றத்தையும், செவிகள் அவருடைய உபதேசத்தையும், இழக்க மார்க்கமில்லாமற் போனது ஆ! ஆ! எவ்வளவு பரிதாபம்! நமது பூமிதேவியும் அப்பெரியோரைத்தாங்குமேன்மையை யிழந்தனளன்றோ? இக்குறைகளெல்லாம் நிவிர்த்திக்கும் மார்க்கம் ஏதேனுமுண்டாவென ஆலோசிக்கின் உண்டென்றே சொல்லலாம். என்னவெனின், நாமெல்லோரும் அவரைப்போலவே ஒழுகுவோமாயின் நம்முள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரானடேயாகக் கூடுமென ஏன் சொல்லலாகாது? நமக்கு வேண்டியவையெல்லாம் அவரே காண்பித்து விட்டுப் போயிருக்கிறார். ஆதலால் நாமனைவரும் அவர்காலஞ் சென்றதற்காக வருந்திப் பொழுதைப் போக்காமல் நம்மெல்லோரிடத்தும் அவரை ஜீவிக்கச்செய்து, நாம் நல்லவழியிற் செல்வதுமல்லாமல் நம்மைத்தொடர்ந்து வரும் நமது சந்ததியாரையும் அவ்வழியில் திருப்புவோமாக. S. வேதமூர்த்தி முதலியார். B. A.

NATARAJA SYMBOL.

நடராஜபிம்பம்.

நம் முன்னோர்கள் நமக்கு நன்மை செய்வதற்காக எவ்வளவு சிரமமெடுத்திருக்கிறார்கள்! அவர்களெல்லாரும் ஞானமடைந்து உய்யும்பொருட்டுப் பல உபநிஷத்துக்களையும், அவற்றிற்கு விருத்தியுரைகளையும் செய்தது மாத்திரமல்லாமல், அவரவர் பக்குவத்திற் கேற்றவாறு எண்ணிறந்த சாஸ்திரங்களையுண்டுபண்ணியும், அவைகளிலெல்லாம் அடங்கியிருக்கும் சாரத்தை யாவரும் எளிதில் உணரும் வண்ணம் மிகவும் சுலபமான மார்க்கங்களால் வெளிப்படுத்தியுமிருக்கிறார்கள்.

ஒவ்வோரிடங்களிலும் ஆலயங்கள் கட்டுவித்து அவைகளிலெல்லாம் பிம்பங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். 'இவ்விதமாவது அந்தரங்கக் கருத்தென்ன? அல்லது சாதாரணஜனங்கள் நினைப்பதுபோல அவைகள் தாம் கடவுளா? அல்லது சிலர் பழிப்பதுபோல அவ்வேற்பாடு கெடுதியை விளைவிக்கவோ அறியீனத்தைப் புகட்டவோ செய்கின்றதா?' என ஆலோசிக்கின், பிம்பஆராதனை கெடுதியையுண்டுபண்ணுவதன்று. நமது இருடிகளில் அநேகர் பிம்ப ஆராதனையினாலேதான் உயர்ந்தநிலையை அடைந்திருக்கிறார்கள். இப்பிம்ப ஆராதனையின்நிலையை அறிவதற்கு ஒரு உவமை எடுத்துக்கொள்வோம். இப்பொழுது கணிதம் இருக்கின்றது. இதில், பூச்சியம், ஒன்று முதலிய எண்களுக்கு 0. 1. முதலிய குறிகள் இட்டிருக்கிறார்கள். இத்தகைய குறிகளை வைத்துக்கொண்டு கணிதசாஸ்திரத்தின் உண்மைகளைக் கண்டுபிடித்தும், அவைகளை உறுதிப்படுத்தியும், இன்னும் விசித்திரமான அநேக வேலைகளைச் செய்தும் வருகிறார்கள். இப்பொழுது எண்ணைக்கூடாத சங்கியைக்குக் கூட.∞ என்றகுறி இட்டிருக்கிறார்கள். இக்குறிகளால் கணிதசாஸ்திரத்திற்குத் தடைவந்ததாய்க் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இவைகளால் அதற்கு உதவியே தவிர கெடுதியில்லை. அதுபோல விக்கிரகஆராதனையும் மேலேறிச் செல்லுபவர்க்குத் தடைசெய்வதில்லை. நாமெல்லோரும் மேலேறிக்கியேபோகிறோம். ஆகையால் அவை நமக்குத் தடையாக வேறா. கணிதத்திலக்குறிகளையெல்லாம் உபயோகிக்கும்போது அவைகளின் அர்த்தத்தை மாத்திரமே நாம் கிரகித்து மேலே கடினமான கணக்குகள் போடுவதுபோல், இவ்விக்கிரகங்களின் அர்த்தங்களை நாம் கிரகித்துக்கொண்டு மேற்செல்லலாம். கணிதத்திற்குக் குறிகள் எவ்வளவு ஆதாரமோ அவ்வளவு மேலேறும் முமுக்ஷுக்களுக்கு விக்கிரகஆராதனை ஆதாரம். ஆனால் சாதாரணஜனங்கள் விக்கிரகங்களின் அர்த்தங்களைத் தெரிந்துகொள்ளுகிறார்களில்லை. வேறுசிலர் அவ்வாராதனையைப் பழிக்கிறார்கள். அங்ஙனம் பழித்தற்குக் காரணம் அவர், பிம்பங்கள் குறிப்பிக்கும் பொருளை உணராமலும், பெரும்பாலார் அவைகளை கடவுள் எனப்பாவித்து வழிபாடுசெய்தலைக் கண்டுமிருப்பதுவே. எதார்த்தத்தில் விக்கிரகங்களெல்லாம் சுருதியின்ரகசியங்களை வெளியிடவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது சைவசம்பிரதாயத்தில் சிறந்தபிம்பங்களுள் ஒன்றாய நடராஜ பிம்பத்தை எடுத்துக்கொள்வோம். இதன் அர்த்தத்தை விசாரித்துப்பார்க்கின் நம்முன்னோரது மகிமையும் விக்கிரக ஆராதனையின் சிறப்பும் நமக்கு நன்றாய் விளங்கும்.

நடராஜனென்ற பதத்திற்கு நாடகாதிகாரியென்று பொருள். இவ்வுலகமாகிய நாடகத்திற்கு அதிகாரி. அவனசைந்தால்தான் இவ்வுலகு அசையும். இதுபற்றியே தாயுமானவரும் "அவனன்றி ஓரணுவுமசையாது" என்றுகூறியிருக்கிறார்.

இப்படமானது,

ஒரு புருடன் நடனமாடுகிற பாவத்தில் இருக்கிறது. இப்புருடன் ஆத்மாவைப் புணர்த்துகிறான். சிறந்த ஞானமடைந்த ஒருவன் தனக்கும் ஆத்மாவுக்கும் தோன்றும் பேதம் பொய்யென்றறிவான். ஆதலால் இப்புருடனை ஞானியென்றும் சொல்லலாம். இவன் அம்சத்தால் தான் உலகமெலாமுமாதலால் நடனம் காட்டப்பட்டிருக்கின்றது. அவன், தான் கொன்ற புலியின் தோலை அரையிலுடுத்தியிருக்கிறான். புலியாவது அகங்காரம். அகங்காரத்தால் விளையும் கோபம், சண்டை முதலியவைகளை ஆலோசித்தால் அதை ஒரு மூர்க்கமான புலியாக உருவகப்படுத்தினதே மிகத்தகுதியானதென்பது விளங்கும். ஆகையால் இது உணர்த்துவது யாதெனில், ஞானியாகவேண்டுமானால் அகங்காரத்தை வேரோடு களைதல் வேண்டுமென்பதே.

கீழ் ஊன்றியிருக்குங் காலால் ஒரு அரக்கனை மிதித்திருக்கிறான். இவ்வரக்கன் மாயையை உணர்த்துகிறான். இராமாயணத்தில் இந்திரஜித்து, இராவணன் முதலிய அரக்கர்களெல்லாம் மோசஞ்செய்யும் மாயாசக்தியில் நிபுணரென்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகையால் இங்கு ஜகத்மாயையை ஒரு அரக்கனாய் உருவகப்படுத்தியிருப்பது உசிதமே. இதனால் அறிவது யாதெனில் ஞானியாவதற்கு மாயை நீக்கப்படல் வேண்டுமென்பதே.

ஊன்றிய காலினருகில் ஒரு துள்ளும் மான் ஒன்றிருக்கும். அது சஞ்சலமான மனதையுணர்த்துகின்றது.

குஞ்சிதபாதம் அடுத்தகுறி. இது ஜாக்கிரத்,[1] சுவப்ந,[2] சுஷுப்தி[3] ஆகிய நிலைகளைத் தாண்டியபின்னுள்ள துரிய[4] நிலையை உணர்த்துகின்றது. இதுமேலே உயர்ந்திருப்பது, மனதையும், மாயையையும் அடக்கி மேலே சென்றால் துரியநிலையை அடையலாமெனக் குறிப்பிக்கின்றது.

நான்குகைகள் இதன்பின்பு நாம் ஆலோசிக்கவேண்டியவை. ஒருவலக்கையில் உடுக்குப்பிடித்திருக்கிறான். இது "சப்தப்ரஹ்மஜகத்" என்றவாக்கியார்த்தத்தை உணர்த்துகிறது. அதாவது பிரபஞ்சமெல்லாம் சப்தரூபமாய் இருந்ததென்பது. இவ்வுடுக்குக் கையிலிருப்பது, பிரபஞ்சம் ஞானிக்கு இச்சா மாத்திரம்; அதாவது ஞானி உண்டென்

---

1. ஜாக்கிரம் = வாக்கு, பாதம், பாணி, பாயுரு, முதலிய கர்மேந்திரியங்களும், மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஞானேந்திரியங்களும், மனம், புத்தி, சித்தம் அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்களும் தொழிற்படுகின்றநிலை. 2. சுவப்நம் = இருவகை இந்திரியங்களும் அடங்கி அந்தக்கரணமாத்திரம் தொழிற்படும்நிலை. 3. சுஷுப்தி = இந்திரியாந்தக்கரணங்களின் வியாபாரமின்றியும், பிரபஞ்சப்பொருள்களின் தோற்றமின்றியும் சுகமாகநித்திரை செய்யுமநிலை. 4. துரியம் = ஆத்மாவானது யாவற்றிற்கும் சாக்ஷியாய் நிற்கும் நிலை. [ப-ர்]

நினைத்தால் அவனுக்குண்டு, இல்லாவிட்டால் இல்லையென்பதை உணர்த்துகின்றது. மற்றொருதிருக்கை அமைதிகாட்டுகிறது. அதாவது இந்நிலையில் உள்ளோர்கள் சுகதுக்கமுதலிய துவந்துவங்களைப் பாராட்டாது, சாந்தமாயெப்பொழுதும் இருக்கவேண்டும், இருப்பார்களென்பவற்றை உணர்த்துகின்றது. ஒருதிருக்கை, குஞ்சிதபாதத்தைக்குறிப்பாய்க்காட்டுகின்றது. அதாவது மாயையையும் மனதையும் அகற்றி மேலே தூரிய நிலையையடைதல் ஞானியாதற்கு அவசியமென்பதை உணர்த்துகின்றது. மற்றொருதிருக்கை அக்கினிதாங்கி இருப்பது, இவைகளெல்லாம் அனுபவத்தால் அறியவேண்டுமென்பதையுணர்த்துகின்றது. எப்படி அக்கினியின் தேஜஸைப்பார்த்தே அதனை அறியவேண்டுமோ அப்படியே ஆத்மஞானத்தின் ஆனந்தத்தை, அனுபவித்தே அறிதல் வேண்டுமென்பது. இதற்கிசையத் தாயுமானவரும் "கருதரியசிற் சபையில் ஆனந்த நிர்த்தமிடு கருணாகரக்கடவுளே" என்றார்.

சிரசில்கங்கையையும் பாம்புகளையும் அணிந்திருக்கிறான் நடனப்புருடன். கங்கையினது குளிர்மையானது சிற்சக்தியின் விலாசத்தை உணர்த்துகின்றது. பாம்புகளோ காலத்தையுணர்த்துகின்றன, காலாதிகளெல்லாம் ஞானியையொன்றுஞ் செய்யாவென்பது பொருள்.

இவைகட்கேற்பநடனமாடும் இடம் தில்லைவனம்-மயானம். தில்லைவனமென்பது மாறுபாடுநிறைந்த இவ்வுலகத்தை உணர்த்துகிறது. மயானத்திலோ நாமரூபாதிகளெல்லாம் அழிந்து எல்லாம் பிடிசாம்பலாயிருக்குமிடம். அதாவது ஞானிக்குத்துக்கஏதுவும் மாயாகாரியமுமாகிய நாமரூபங்கள்யாவும் தக்தபடமாகப் புலப்படுமென்பது.

இவையே நடராஜபிம்பத்தில முக்கியமானவை. சுருக்கமாய் இதன் அர்த்தம்யாதெனில்:—சுத்த அந்தரங்கத்திலிருக்கும் ஆத்மாவினது ஆனந்த சொரூபத்தை அறிந்து முக்தனாகவேண்டுமானால் அகங்காரத்தைப்பிராபிக்கேதுவாகிய மாயை, மனதுமுதலியவைகளை நீக்கி, அதாவது அடக்கி, தூரியநிலையை அடையவேண்டியதவசியம். இவ்வாறு இருப்பவர்களாகிய ஞானிகளுக்கு அமைதியும்சாந்தமும்பிறக்கும். இவர்களுக்குப் பிரபஞ்சமெல்லாம இச்சா மாத்திரமே. இவர்கள் சிற்சக்தி நிறைந்தவர்களாயிருப்பார்கள். இவைகளெல்லாம் அனுபவத்தால் தெரியவேண்டுமேயல்லது வேறுவிதத்தால் அறியத்தக்கனவல்ல.

இதுவே நடராஜ பிம்பத்தினது உள்ளர்த்தம். இது வேதாந்தபரமான அர்த்தம். இவ்வாறு நோக்கியது எதற்கோவெனின், வேதாந்தபரமே முக்கியமானதாகலின். இவ்வர்த்தத்தையுடைய பிம்பத்தைவணங்காமல் யார்தாமிருப்பார்கள். இதுபோலவேமற்றையபிம்பங்களுக்கும் சிறந்தஅர்த்தங்களுண்டு. இவ்வர்த்தங்களை ஓராது வணங்குவது முற்றும் தவறெனச் சொல்லலாகாது. ஏனெனில் பகவானது நிர்க்குணசொரூபத்தை மனதில் பாவனைசெய்வது எளிதல்ல. அதற்குமுதலில் இவ்விதப்பயிற்சி வேண்டுவது இன்றியமையாதது. விக்கிரகஆராதனை செய்யாதவரெனத் தோன்றுபவரும் மனதினுள் ஓர்பிம்பத்தையே பாவிப்பர். அவ்வண்ணம் செய்யமனோசக்தி யில்லாதர்க்குப்புறத்தில் வேண்டுவதாவசியமன்றோ? ஆகையால் எவ்விதத்தாலும் விக்கிரகஆராதனைசிறந்ததேயன்றிவேறன்று. அதனர்த்தங்களை யுணர்ந்தாயினும் உணராதாயினும் மனப்பூர்வமாய் வழிபடுவோர், படிப்படியாய்ச்சென்று, மேலானநிலையையடைந்தமைதிபெறுவரென்பது திண்ணம்.

ஆ. சீ. க.

---

1. தக்தபடம்=எரிந்தவஸ்திரம். (ப-ர்)

WORLDLY LOVE.

ஆசை

ஏ! ஆசையே! நீ ஜனங்களை என்னபாடுபடுத்துகின்றனை! மாட மாளிகைகளில் வசிப்பவரையேனும் அணுகாதிருந்தனையோ? ஏகச்சக்ராதிபத்தியம் செய்யும் அரசனையேனும்விட்டு நீங்கினையா? உலகமெல்லாம் துச்சமெனத்துறந்த துறவிகளையும் வாட்டுகின்றனையே! உனக்குச்சற்றும் இரக்கமில்லையோ? என்னகொடுமை செய்கின்றனை!!

கிடைப்பதொன்றும் இல்லையாயினும் செல்லுதற்கரிய அநேகதேசங்களிற்றிரியச் செய்கிறாய். ஜாதி,குலமென்ற அபிமானங்களைத்துறந்து, ஊழியஞ்செய்து,ஏமாறச்செய்கிறாய், மானத்தைவிட்டுக் காக்கைபோற் சபலங்கொண்டு கண்டவிடமெல்லாம் புசிக்கச் செய்கிறாய்.இத்தனையுஞ்செயினும் நீசற்றுந்திருப்தியடைகின்றாயுமில்லை. உனதுகொடுமையைச்சகிப்பதரிதாகவே இருக்கின்றது. செல்லாக்காசும் கிடைக்காவிடினும்,புதையலுக்காகப்பூமியைத் தோண்டவும், பொன்னுண்டாக்குதற்காக மலையிலுள்ளசற்பொடிகளைஉலையில் வைத்தூதவும், திரவியந்தேடத்திரைகடலுமோடவும், அரசனைமகிழ்விக்கப்பலஉபாயங்கள் செய்யவும், அலைகின்றனை. ஏ! ஆசையே! உனக்குமனிடர்மீது சற்றுங்கருணையில்லையோ? உன்வலைப்பட்ட ஜனங்கள்விவேகத்தைக் கைவிட்டென்னதான்செய்யச் சலிக்கிறார்கள்! மூடர்களைச்சார்ந்து, அவரதுகொடுஞ்சொற்கள் தங்கள் கண்களில்கண்ணீரைப்பெருக்குவனவாயினும் அவற்றைப்பொறுத்துப் புன்னகைபுரிகிறார்கள். பணவெறியில்மதியிழந்தமூடர்களையும் கைகூப்புகிறார்கள். மானமிழந்து, தம் புகழைத்தாமே பாடிக்கொள்ளுகிறார்கள். ஆ! ஹா! உன்வல்லமையை என்னசொல்வது!

ஏ! ஆசையே! உன்னைத்துறந்தவர்களன்றோ முனிவரெனப்படுவோர்? அவர்களையும்விட்டு நீங்காமலே அவர்க்கெலாம் முனிவராந்தன்மை வரச் செய்கின்றனையே! இதென்னஆச்சரியம்! மாந்தர்உனக்கிடங்கொடுத்து முனிவர்களைப்போலவெவ்விதஅவமானத்தையும், சம்சாரசுகத்தையும்துறக்கின்றார்கள். அதுமாத்திரமா? கொடும்பசியிலேயும், கடுந்துளியையும்,பெருங்காற்றையும் சகிப்பதோடு இராப்பகலாய் நித்திரையின்றித் தியானமும்செய்கிறார்கள். இவ்வாறுமுனிவர்செய்யும் யாவற்றையும் செய்தும்அந்தோ அவற்றின் பயனைமாத்திரம் அடைகிறார்களில்லை. நீஅவர்களிடம் தங்கியன்றோ அவர் குடியைக்கெடுக்கின்றனை? என்னபாதகம்! இதுஉன்னைவிடுமோ? ஜனங்கள் போகங்களைப் புசிக்கவொட்டாமல் அவர்களைக் கவலையின்னலைவைக்கின்றாய் அவர்கள்தபசுசெய்வதையொழித்துஅவர்களைத் தபிக்கச்செய்கின்றாய். முகமெல்லாம்பள்ளம்விழுந்து, தலையெல்லாம்நரைத்து, சரீரமும்ஒடுங்கி, இந்திரியங்களும் தளர்ந்துபோயினும்நீமாத்திரம்சற்றும் தளராது இளம்பருவங்கொண்டாடுகின்றனை. இதென்ன ஆச்சரியம்! இவ்விதமெல்லாம் கஷ்டப்படுத்தும் நின்னைச்சத்துருவென்றெண்ணாமல் மித்துருவாக ஜனங்கள்பாவிக்கிறார்களே. இதென்னபேதமை! விவேகமாகிய கூட்டுறவால் நின்னைநீக்குமாந்தர் எப்போது சுகமடைவார்களோ அறியேம்.

A. ஸ்ரீநிவாசய்யர். B. A, B. L.

HOW TO AVOID SQUABBLES IN TEMPLES.

ஆலயக்கலக நிவாரணோபதேசம்.

பெருமாளாலயங்களில் ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்குக் கிரீட, கவச, பூஷணாதிகள் போல அலங்கார மாகத் திருமுக மண்டலத்தில் கஸ்தூரிதிலகம் ஒன்றே ஊர்த்துவபுண்டரமாக இடுதல் இருமதங்களுக்குஞ் சம்மதமெனினும், வடகலை நாமமோ, தென்கலை நாமமோ எழுதுதல் நிராதாரமாயும், சாதாரண யுக்திக்கு முரணுமாயிருத்தலோடு பகவானை அவமதித்ததாகுமென்றும் எடுத்துக்காட்டி, பகவானுக் கநாவசியமான அந்நாமங்களை அவருடைய நெற்றியில் தரித்தல் நிமித்தம் நம்மவர் ஆங்காங்கு போர் புரிந்து, வழக்கிட்டுத் திரிதல் விவேகமின்மை யென்றும், உசிதமல்லாததென்றும் நமதரிய 'விவேகபாநு' வின் ஆறாவது சஞ்சிகையில் வெளிப்படுத்தியிருக்கிறோம். இப்பொழுது அதுபோன்ற மற்றொரு சாரமற்ற கலகமூலத்தை விவரிப்போமாக.

வேதங்கள் பிராம்மண, க்ஷத்திரிய, வைசியராகிய மூவருணத்தவர்க்கே உரியனவாயும் ஏனையோர்க் குரிமையல்லாதனவாயுமிருத்தலை நினைத்து, மோக்ஷமாகிய பேரானந்தத்தை அடைய இச்சிக்கும் யாவரும் அவைகளின் சாராம்சங்களைத் தெரிந்து, பக்தி மார்க்கத்திலிறங்கி உய்யும் பொருட்டு, சர்வஜீவதயாளுக்களான ஆழ்வார்கள் பக்தி, ஞானங்களை உண்டாக்கி வளர்க்கத்தக்க பாகங்களை தமிழ்ப்பதிகங்களாகப் பாடினார்கள். இவை 3900 பதிகங்களடங்கிய திருவாய்மொழி யாயின. இவைகள் வைணவர்களால் கௌரவத்தில் வேத துல்யங்களாகக் கொண்டாடப்படினும், இன்னார் படிக்கலாம், இன்னார் படிக்கலாகாது என்ற விதிவிலக்கின்றி, தமக்குக் காரணனாகவும், பெறுதற்குரிய புருஷார்த்த மாகவுமுள்ள ஸர்வேச்வரனை அறியவும், அடையவும் அவரவும் எவரும் கற்றுணர்ந்து ஆனந்திக்கத் தக்க பாடல்களாயின. இவை கலியுகம் பிறந்து 500 வருஷங்களுக்குள் உண்டாயின. பின்னரும் 100 பாடல்கள் கலியுகம்பிறந்து 4100 வருஷங்களுக்குப் பின் பாடப்பட்டு மற்றவையுடன் சேர்க்கப்பட்டன. இது வைஷ்ணவ குருபரம்பரையால் வெளியாகிறது.

மேலேகண்ட 3900 பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளிய ஆழ்வார்களில் கடைசியாழ்வாரான திருமங்கையாழ்வார் காலத்திலேயே அவைகளை ஆலயங்களில் பெருமாள் சந்நிதானத்தில் பாடுகிற வழக்கம் ஏற்பட்டதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

சுமார், சென்ற 600 வருஷங்களுக் கிடையில் வேதாந்ததேசிகர் என்னும் ஓர் ஆசாரியர் அவதரித்து, வைணவப் பிரவசனம் செய்துவந்தார். ஞானப்பெருக்கத்தாலும், எல்லையற்ற வைராக்கியத்தாலும் இவர் அளவில்லாப் பிரசித்தியடைந்து, எல்லாராலும் கொண்டாடப்பட்டிருந்தார். அவரிடம் கொண்ட பக்தியினால் அவருடைய சிஷ்யர்களிற் சிலர் அவர் பேரில் ஸ்தோத்திரமாக "இராமாநுஜ தயாபாத்திரம்" என்பதாதியான சுலோகங்கள் பாடினார்கள். திருவாய்மொழிப் பிரவசனத்தில் அவர் எடுத்துக்கொண்ட அளவிறந்த பிரயாசைக்கு நன்றி பாராட்டுவதாக அவருடைய சிஷ்யர்கள் அதனைத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் மேற் கூறிய அவரது ஸ்தோத்திரமான பதிகங்களைச் சொல்வாராயினர். வைஷ்ணவர்களில் வடகலை வகுப்பினரெல்லாரும் இவரையும், இவருக்கு முன்னுள்ள பரம்பரையையும் தமக்கு ஆசாரியர்களாகக் கொண்டாடுகிறார்கள்,

வேதாந்ததேசிகருக்குப் பின் சுமார் 150 வருஷங்கள் கழிந்த பிறகு மணவாளமாமுனி என்று ஓர் ஆசாரியர் அவதரித்து வைஷ்ணவத்தை வளர்த்து வந்தார். இவரும் ஞானத்தாலும், பக்தியாலும் பெருங்கீர்த்தியை யடைந்து எண்ணிறந்த சிஷ்யர்களால் பின்பற்றப்பட்டார். அச்சிஷ்யர்களிற் சிலர் அவருடைய ஸ்தோத்திரமாக "ஸ்ரீசைலேச தயாபாத்திரம்" என்று தொடக்கமான சிலபதிகங்களைப் பாடித் தங்கள் ஆசாரியர் பேரிலிருந்த பக்தியால் திருவாய்மொழி ஆரம்பிக்கும்போதும் முடிக்கும் போதும் அப்பதிகங்களைப் பாடவேண்டுமென்னும் ஏற்பாடு செய்தனர். இவரையும் இவருக்கு முன்னுள்ள பரம்பரையையும் தென்கலை வகுப்பினரெல்லாரும் தமக்கு ஆசாரியர்களாகக் கொண்டாடுகிறார்கள்.

ஆகவே இருவகுப்பினருக்கும் ஸ்ரீமந்நாராயணன் முதல் கலி 4100-க்குச் சமீபத்தில் அவதரித்த ராமாநுஜாச்சாரியர் வரை குருபரம்பரை ஒன்றேயாய், அவருக்குப் பின் இரண்டு கிளையாகப் பிரிந்து, வேதாந்ததேசிகர் உட்பட்ட ஒன்று வடகலை வகுப்பினருக்கும், மணவாளமாமுனி உட்பட்ட மற்றொன்று தென்கலை வகுப்பினருக்குமாக இறங்கிவருகிறது.

கோவில்களில் பகவான் முன்பு யாவரும் கேட்டானந்திக்குமாறு திருவாய்மொழி ஓதுதலேற்பட்டது சுமார் கலி 500-ம் வருஷமுதலென்று சொல்லப்பட்டது. அப்போது முன்னும் பின்னும் சொல்லப்படுவன ஏற்பாடாகவில்லை. சிவன் கோவில்களில் தேவாரம், திருவாசகம் போலும், எங்கும் வேதம் போலும், பெருமாள் கோவில்களில் திருவாய்மொழியும் ஒரு கக்ஷியின் சார்பின்றிப் பொதுப்பட்டிருந்தது. மேலே கண்ட ஆசாரியர்களின் காலமுதல் அதாவது சுமார் 600 வருஷ காலமாக ஒரு கக்ஷியைச் சேர்ந்த குருவணக்கத்தை முன்னும்பின்னும் சொல்வதாயேற்படுத்திக்கொண்டு, வைஷ்ணவர்கள் இருகக்ஷிகளாகப் பிரிந்து ஒருவரை யொருவர் விரோதிக்கலாயினர். இந்தன ஏற்பாடு கலகவித்துக்கு விளைநிலமாயிருப்பது எல்லாருக்கும் பிரத்தியக்ஷமாதலால், அதுவேதவிதியோ, ஆகமக்கொள்கையோ அன்றென்றும், வெகுசமீப காலத்தில் தான் கக்ஷிப்பிமானிகளால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதொன்றென்றும் அதின் தீயபயனை யறிந்த வுடனேனும் அதை நிவர்த்தி செய்து, நாம் எல்லாரும் ஐக்கியப்பட்டொழுகல் உசிதமென்றும், கண்டு வற்புறுத்தும் கடமையுடையராயினோம்.

கோவில்கள் பொதுஸ்தலம்; அதாவது, கடவுள் வழிபாட்டின் பொருட்டு பக்தர் யாவரும் சென்று சேரக்கூடிய இடம். இத்தேசத்தில் ஆசாரிய பரம்பரையோ ஒன்றேயாக இல்லாமல் பலவாக இருக்கின்றது. ஹிந்துக்கள் வடகலையாரென்றும், தென்கலையாரென்றும், ஸ்மார்த்தரென்றும், மாத்வரென்றும், சைவரென்றும், பலவகுப்புகளாகப் பிரிந்திருக்கிறார்கள். இவர்களில் ஒருவகுப்பார் மற்ற வகுப்பினர்களின் குருக்களைப் பற்றினவரல்லர். அவர்களிடம் விசுவாசமுடையவருமல்லர். இங்ஙனமிருக்க, எல்லாரும் பெருமாளைச் சேவிக்க வந்து கூடி, தீர்த்தம் முதலான பிரசாதம் பெறச் சிரத்தையுடன் காத்திருக்கும் காலத்தில் அக்கூட்டத்தில் ஏகதேசமாய்க் கூடியிருக்கும் ஒரு வகுப்பார் தமக்கு மாத்திரம் உரித்தான ஒருகுருவைப் பலவாறாகத் துதித்து, நீடூழிவாழக் கூக்குரலிட்டுப் பிரார்த்திப்பாரானால், அது உசிதமாகுமா? ஏனையோர்களும் அவ்வாறே தத்தம் குருக்களைத் துதிக்கவும் பிரார்த்திக்கவும் தூண்டப்பட்டவராகாரா? விசுவாசமற்ற ஏனையோர் காதில் விழும்படி தம்குருவை ஸ்தோத்திரஞ் செய்வதினு

னும், வாழ்த்தியதினாலுமா, அவருக்கு மேன்மை யுண்டாகும்? உண்டாகாது. பின்னையோ அருவையும், அருவருப்பும், அதனால் த்வேஷமே, விரோதமுமே உண்டாகும். இதைப் பிரத்தியக்ஷத்திலும் காண்கிறோம்.

ஜனப்பெருக்கம், ஐசுவரியமிகுதி, கல்வித்திறம், பிரபுக்களின் ஆச்ரியம் இவைகளாலோ அல்லது இவைகளிற் சிலவற்றினாலோ ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில் ஒரு வகுப்பாருக்கு ஒரு காலத்தில் விசேஷச் செல்வாக்கு உண்டாகக் கூடும். அக்காலத்தில் அவ்வகுப்பார் அந்த ஸ்தலத்திலுள்ள கோவிலில் தமது குருவுக்கு ஏற்றமான ஒரு தனி ஆசாரியனை ஏற்படுத்திக் கொள்வார்களால் அவருக்கு அச்செல்வாக்கு என்றென்றைக்கும் நிலைத்திருக்குமா? இருக்காதே. காலவர்த்தியில் அவரது செல்வாக்குக் குறைந்து, மற்றவர் செல்வாக்கு மேலோங்குமாயின், அவருடைய ஏற்றமான புகழ்ச்சிப் பிரசங்கத்தில் மற்றவருக்கு அனுதாபமும் பின்னால் அருவையும் ஜனித்து, பராதனத்துக்கும் கலகத்துக்கும் போருண்டாதலன்றோ சகஜம்? ஆகலின் தமக்கு விசேஷ செல்வாக்குக் காலத்தும் பொதுவிஷயங்களில் பொறை கொண்டு தம்மை மேன்மைப்படுத்தப் பக்ஷபாதம் செய்யாதிருப்பார் சான்றோர். அங்ஙனமன்றித் தமது செல்வாக்குக் காலத்தில் தம்மை மேன்மைப்படுத்திக் கொண்டு தாம் மெலிவெய்துங்கால் அதனை யிழந்து மனக்கவலை யுறுவர் ஏனையோர்.

வடகலை, தென்கலை வகுப்பினர்கள் மேலேகண்டபடி ஐக்கியக்கேடான ஒரு ஏற்பாட்டை அனுஷ்டித்துக்கொண்டு பொருளிழந்து, வீடுவிட்டு, கோர்ட்டேறி கடுரங்கைகள், சண்டையிட்டுக்கொண்டிருப்பது போதாமல், அவர் சந்ததியாரும் இவ்விதமே சீர்கெட்டு அலைவதற்கு, இன்னும் அதிகக்கலகாஸ்பதமான வித்துக்களை விதைத்து வருகிறார்கள். அவர்களுள் ஆசாரியத்துவம் விசேஷதரக்கவென்று 74 வகையார் ஏற்படுத்தப்பட்டிருப்பதில், இப்போது தென்கலையாருள் வானமாமலை மடத்தாரும், வடகலையாருள் அஹோபில மடத்தாரும், சிஷ்யக்கூட்டத்தாலும், ஐசுவரிய மிகுதியாலும், கட்டுப்பாட்டினாலும் விசேஷ செல்வாக்குள்ளவர்களாக இருக்கிறார்கள். அவ்வித செல்வாக்கை வித்தியாபிவிர்த்தியிலும், ஜாதியோத்பாதனத்திலும், நாகரிகவளர்ச்சியிலும் விநியோகிக்க அவர்கள் கடமைப்பட்டவர்களா யிருக்கும் தங்கள் குருப்பிரசம்பரையையும் வணக்கத்தையும், பலகுருக்களினுடையவும் சிஷியர்கள் பெருமான் சேவைக்காக வந்து திரண்டிருக்கும் சபைகளின் மத்தியில் சொல்ல வைத்தனைப்பட்டு வருகிறார்கள். வானமாமலை மடத்துக்குக் கூடஸ்தரான ஜீயர் சுவாமிகளைப் புகழ்ந்து வணங்குவதான அர்த்தமுடைய "ரம்மிய ஜாமாத்ருயோகீந்த்ரபாதரேகாவலம்பினம்" என்று தொடங்கி ஓர் பதிகம் உண்டு. அவ்வாறே அஹோபில மடத்துக் கூடஸ்தரான ஆதிவண் சடகோப சுவாமிகளைப் புகழ்ந்து வணங்குவதான "கேசவார்ய கிருபாபாத்ரம்" என்று தொடங்கி ஓர் பதிகம் உண்டு. இவ்விரு மடத்தார சிஷ்யர்களும் செல்வாக்குள்ளவர்களாயிருக்கு மிடங்களில் முறையே மேற்கண்டபதிகங்களையும் சேர்த்துக்கோஷ்டிகளின் மத்தியில் சொல்லிவரும் வழக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். இனிமேல் இவர்கள் செல்வாக்கு ஒரு காலத்தில் குறைந்தால் அப்போதும் அப்பதிகங்களை அவர்கள் சொல்லப் பிறர் சகிப்பாரோ? மாட்டார்கள். அப்போது வீண்கலகங்களும் வழக்குகளும் தானே சம்பவிக்கும். முதலிலேயே பின்வரும் கேட்டை நினைத்துக் கெட்ட வழக்கங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வாராது நிறுத்துதல் நன்மை பயக்குமன்றோ?

ருஷிஜ்ஞர்கள் பலருக்கும் வழிபட்டிருப்பதால், எல்லாரும் வந்து பெருமாளை வணங்கு மிடத்தில் ஒரு குருவையும் வாழ்த்தாமல் பெருமாளை ஸ்தோத்திரஞ்செய்வதில்லை வேதம், திருவாய்மொழியைச் சொல்லும்படி யாவரும் ஓதநிருந்த ஏற்பாடு செய்துசொல்வதே நன்மையாகும். குருவைப்புகழ்ந்து வணங்க எவருக்கும் பிரியமிருந்தால், அவருக்குப் பிரத்தியேக ஆலயம் கட்டுவித்து அதில் அவரைப் பிரதிஷ்டை செய்து, அதில் அவருடைய சிஷ்யர்களும் பிரியப்பட்ட வரையோரும சேர்த்து வணங் கொண்ட மட்டும் வையார் வாழ்த்திக் கையாரத்தொழுவதில் ஒருவருக்கும் ஆக்ஷேப உண்டாகாது. தவிரவும் அவர்களுடைய குருபக்தியை எல்லாரும் கொண்டாட ஏதுவா யுமிருக்கும்.

S. R. கிருஷ்ணமாச்சாரியர், B. A.

SOME NOTED TRAVANCORIANS.

சில பேர்பெற்ற நவீனச் சேரநாட்டோர்

திருச்சாழல்.

(முன் தொடர்ச்சி)

7 இன்றுசட்டச் சபையதனுக்கி யெல்லையிலாப் பயனளிக்க
நின்றபெரும் புகழுடைடயோனதியெனக்கு நவிலேடீ
மன்றிலவி துணைமையுடன் மன்னுசிவ சுப்ரமணியன்
என்றுபல்லோர் போற்றிவர விருப்பவன்காண் சாழலோ.

8 பத்திரிகை யெனுஞ்சுடராற் பல்லோர்க்கு மிருளகற்றி
வித்தகராய் நிற்பவருள் மேதக்கோன் யாரோடீ
சத்திபெறும் ஆங்கிலரின் சற்குணங்கள் யாவையுமே
சித்தியுறப் பெற்றபர மேஸ்வரன்காண் சாழலோ.

9 எண்ணரிய விசைநூலின் இனமுழுதுந் தெரிந்தவனைப்
பெண்ணழகின் குடையாய்நீ பெருமையுடன் பகரேடீ
பண்ணிசையாற் கந்தருவர்ப் பரிந்தவனி சேரவைக்கும்
இன்மைதனி லிலக்ஷுமணன் சிறந்தான்காண் சாழலோ.

10 நீதிசபைக் கணிகலனாய் நிகரில்பல நியாயமுடன்
வாதித்து வென்றிகொளும் வண்மைபெற்றோர் யாரேடீ
நீதிஸ்மிருந்து நாயகமும் நிகழரெங்கா ராயனுமே
மாதிரமெல் லாமபுகழ மாண்பினர்காண் சாழலோ.

11 இன்னுமிந்த நாடதனில் எல்லையில்சீர்த் தீபெற்று
மன்னுபவர் பலரன்றோ மானேநீ பகரேடீ
அன்னவரின் பெருமைகளை அறையவெனக் கரைந்தனவன்
என்றேபல் லாப்பவடைக்க விசைந்திலன்காண் சாழலோ.

கெ வி. குப்தா.

STUDENTS' COLUMN.

மாணவர் பக்கம்.

What Good A Saint's Visit May do.

சாதுவின்பிரசன்னதையாலுண்டாகும் நன்மை.

ஒரு காலத்தில் நாரதமகாமுனிவர் கிருஷ்ணபரமாத்மாவினுடைய இருப்பிடத்திற்குச் சென்று, அவரைக்கண்டு வணங்கி "சுவாமின்! சாதுக்களின் வரவால் என்னென்ன நன்மைகள் உண்டாகும்" என்று கேட்க, ஜகத்குருவாகிய கிருஷ்ணபகவானும் அதனுண்மையை அவருக்குப் பிரத்தியக்ஷமாக விளக்கக்கருதி, ஓர் சாணக்கிருமியினிடத்தில் போய் அவருடைய கேள்வியைக் கேட்கும்படி சொல்ல அவர் அவ்வாறே அக்கிருமியினிடம் சென்று தமது கேள்வியைக் கேட்டார். அவருடைய வார்த்தைகள் அதின் காதில் விழுந்தவுடனே கிருமி இறந்துபோய்விட்டது. இதைப்பார்த்து மிகவும் விசனித்து, பக்தசிரோன்மணியாகிய நாரதர் மீண்டும் கிருஷ்ணபகவானுடைய சன்னிதானத்திற்குப் போய், நடந்த விஷயத்தை விபரமாய்ச் சொன்னார். பகவான் அவ்வார்த்தைகளைச் செவியுற்று மறுபடியும் அவரை ஒரு கிளிப்பிள்ளையினிடம் போய்க்கேட்கும்படி அனுப்பினார். நாரதர் தலை வணங்கி பகவானுடைய உத்திரவின் பிரகாரம் கிளியினிடம் போய்க்கேட்க, அதுவும் யாதொரு மறுமொழியும் கூறமுன் அக்கிருமியைப்போலவே மரித்துப்போயிற்று. அதைப்பார்த்து நாரதமகாமுனிவர் அதிகசஞ்சலத்துடன் திரும்பவும் பகவானிடம்போய் தாம் கேட்ட கேள்விக்கு விடையருளுமாறு பணிவாய் வேண்டிக்கொண்டார். பரமாத்மாவானவர் அவரைத் திரும்பவும் ஓர் மானிடத்திற் சென்று கேட்கும்படி ஆக்ஞாபிக்க, அவரும் அங்ஙனமே அம்மானிடத்திலும் போய்த் தமது கேள்வியைக் கேட்டார். அதுவும் இவரைப் பார்த்தக்ஷணத்திலேயே மாண்டு போயிற்று. அதைக்கண்ட நாரதர் மிகவும் ஆச்சரியமடைந்தவராய் "இது பகவானுடைய சோதனையேயன்றி வேறன்று", எனத்தீர்மானித்துக்கொண்டு சிறிதும் மனந்தளராது மறுபடியும் கிருஷ்ணபரமாத்மாவினுடைய சன்னிதானத்திற்குச்சென்று, நடந்த வரலாற்றைச் செப்பி தமது கேள்விக்கு உத்தரம் அருளுமாறு மீண்டும் வேண்டிக்கொண்டார். பகவானும் அவரைத் திரும்பவும் ஒரு கன்றினிடம் போய்க்கேட்கும்படி கட்டளையிட, அவரும் கன்றை யணுகித்தமது கேள்வியைக் கேட்க வாயெடுத்தார். அதற்குள்ளாகக் கன்றினுடைய உயிரும் கூட்டைவிட்டுப்பிரிந்தது. அதைக்கண்ட நாரதமகாமுனிவர் அதிசயிப்படைந்து "பகவானது கருத்தை அறியவல்லார் யாவர்? நாம் போகுமிடங்களிலெல்லாம் இங்ஙனம் சம்பவிக்கின்றதே" என்று தமக்குள்ளே ஆலோசித்து திகைத்து, ஒன்றும் தோன்றாமல் பின்னும் பரமாத்வானிடத்திற் சென்று நடந்த சங்கதியைத் தெரிவித்து, அவரது கருணையை அவாவி நின்றார். அவரைப்பார்த்து பகவான் புன்சிரிப்புக் கொண்டு பின்னும் ஒரு சக்கரவர்த்தியைக் குறிப்பிட்டு அவருடைய சிசுவினிடம் போய் வினவினால் சந்தேகம் நிவர்த்தியாகுமென்று கூற, பக்தசிரேஷ்டராகிய நாரதரும் பகவானுடைய கட்டளைப்பிரகாரம் அவ்வரசனது அரண்மனைவாயிலிற் போய்த்தமது வரவைத் தெரிவித்தார். அரசன் மிகவும் மனமகிழ்ச்சியுடன் அம்முனிவரை எதிர்சென்றழைத்துக்கொண்டு போய், நல்லதோர் ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து வேண்டிய உபசாரங்கள் நடத்திக்கொண்டிருக்கும் பொழுது "இராஜஸ்திரீயானவள் ஓர் ஆண்சிசு

லைப்பிரசவித்தனள்" என்றவைகளெல்லாவற்றையுங்கூற, புதல்வன் பிறந்தசெய்தியைக் காதில் கேட்ட அரசனானவன் பிரமானந்தத்தில் மூழ்கி, நாரத மகாமுனிவரை பிரசன்னதையினாலேயே தனக்கு அச்சம்பத்து பலித்ததென்று முனிவரைப் பலவாறு ஸ்தோத்திரஞ்செய்து சிசுவின் ஜாதகத்தைக் கணித்துக் கொடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொண்டார். மகரிஷியும் அதற்குச் சம்மதித்தவர்போல் சிசுவைப்பார்த்துக் கணிக்கும் பொருட்டு அதனை அரசனுடைய பூங்காவனத்திற்குக் கொண்டு வரும்படி கட்டளையிட, அப்பிரகாரமே தாதியொருவள் குழந்தையைப் பூங்காவனத்திற்குக் கொண்டு சென்றாள். உடனே குழந்தையை நாரதர் தமது கையில்வாங்கிக் கொண்டு தாதியை அப்புறம் போகச் சொல்லி விட்டு, சிசுவினிடம் தமது பழைய கேள்வியைக் கேட்டார். சிசுவானது நாரதரைப்பார்த்துப் புன்சிரிப்புக்கொண்டு, மறுமொழி சொன்னதாவது — "பாவனே! சகலவல்லவராயும் திரிகாலமுமறியுஞ் சக்தியுடையவராயுமுள்ள நீர் இக்கேள்வி கேட்டது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது! ஆனாலுஞ்சொல்லுகிறேன் கேளும்; முதல் முதல் நீர்பார்த்த கிருமியும் நானே. உம்முடைய அற்புதமான பிரசன்னம் எனக்குக் கிடைத்தவுடன், அத்தாழ்ந்த ஜன்மத்தினின்றும் விடுபட்டேன். பிறகு நான் கிளியாயும், பசு மானாயும், கடைசியாய் கன்றாயும் பிறந்து புண்ணியாத்மாவாகிய உம்முடைய வரவினால் என்னுடைய கேவலமான பிறவிகளை ஒழித்தேன். உம்முடைய அற்புததெரிசனத்தினாலேயே நான் இப்பெரிய பதவியையடைந்திருக்கிறேன். இப்பொழுதும் உம்முடைய அருளைப்பெற்ற எனக்கு யாது குறையிருக்கின்றது? இனி நான் பிறவிக்கடலைக் கடந்து, பகவானுடைய பாதாரவிந்தங்களை அடைவே னென்பதில் எனக்கு அற்பமும் சந்தேகமில்லை, இவை யெல்லாம் தம்முடைய புண்ணியவரவினாலேயே எனக்குக் கிடைத்தன. பலத்தினால்கட்டுண்டு கிடக்கும் ஜீவர்க்கு இவற்றைப் பார்க்கிலும் வேண்டுவன யாவை?" அதைக்கேட்ட நாரதமகரிஷி அதிக சந்தோஷமடைந்து, சிசுவைத்தாதியினிடம் ஒப்புவித்து விட்டுத் திடீரென மறைந்தருளினார். நண்பர்களே! கவனியுங்கள் நாம் ஜென்மமெடுத்ததின் பலன் நித்தியானந்தமாகிய மோக்ஷவீட்டைக் கைப்பற்றுதலே யாகின்றது. அதுவோ, நிஷ்காமியமாகத் தான தருமம் செய்வதினாலும், சுயநயம் பாராட்டாது சகலர்களையும் சமமாகத்தழுவி அவர்க்கானவை புரிவதினாலும், நமது இருதயத்தைச் சுத்தப்படுத்தி, பகவானது பரிசுத்தமான திருவடிகளுக்கு ஆளாக்குவதினாலேயே லபிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஆனால் இவ்வளவு பிரயாசைப்பட்டு அடையத்தக்கதாயிருக்கும் மோக்ஷவாசம், பகவத்பக்தர்களுடையதெரிசனமாத்திரத்தினாலேயே கிடைக்குமென இக்கதையினால் நன்கு வெளியாகின்றதன்றோ? ஆதலின் சாதுக்களின் வரவை எதிர்பார்த்திருப்பதுமன்றி, அவர்களைத் தேடிநமது கிரகங்களுக்கு அழைத்துவரவேண்டுவதும் அவர்க்கு மனப்பூர்வமாக உபசாரஞ்செய்ய வேண்டுவதும் நமது கடமையாகின்றன. அங்ஙனம் அவரோடு அடிக்கடி பழகுவமேல் நமது துர்க்குணங்களெல்லாம் நீங்கி அவரது நற்குணங்களெல்லாம் அடையப்பெற்று, நமது வாழ்நாள் முழுவதையும் பிறர்க்குபகாரமாகக் கழித்து, இம்மையில்சுகமாக வாழ்வதுடன் மறுமையிலும்என்றுமழியாத சுகத்தைப்பெறுதற் கேதுவாகும்.

யம். கிருஷ்ணசுவாமி முதலியார்.